பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 18 சனிக்கிழமை (03.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 07



## நீர்வேலியில் இருவர் படுகொலையின் எதிரொலி!

# ஹர்த்தாலால் நேற்று குடாநாடு முடங்கியது!

## எங்கும் ரயர்கள் எரிப்பு!! பரவலாக கிரனேட் வீச்சு!!

யாழ்ப்பாணம், டிசெம்பர்3

**நீர்வேலிப் பகுதியில் இளைஞர்கள் இருவர் கோரமாகச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக அழைப்பு விடுக்கப்பட்டிருந்த ஹர்த்தாலினால் குடாநாடு நேற்று முழுமையாக முடங்கிப்போனது.**

**ஹர்த்தால் அழைப்பு காலையிலே பொதுமக்களை எட்டியவுடனேயே சகல பிரதேசங்களும் ஸ்தம்பித நிலையை அடைந்தன. பின்னர் நாளாந்த நடவடிக்கைகள் முழு அளவில் முடங்கின. பிரதான வீதிகள் உட்பட மூலை முடுக்குகள் எங்கும் ரயர்கள் எரிக்கப்பட்டன. இதனால் இராணுவ நடமாட்டங்கள் உட்பட பொதுப் போக்குவரத்துகள் முடங்கின. பல இடங்களிலும் படை நிலைகள், ஈ.பி.டி.பி. அலுவலகங்கள் கிரனேட் வீச்சுக்கு இலக்காகின.**

இரவு விடுக்கப்பட்ட ஹர்த்தாலுக்கான அழைப்பு நேற்றுக் காலை பொதுமக்களை எட்டியதும் நாளாந்தச் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்தன. வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை. பாதி திறந்திருந்த கடைகளும் பின்னர் இழுத்து மூடப்பட்டன. பாடசாலைகளுக்குப் புறப்பட்ட மாணவர்கள் இடைவழியில் வீடுதிரும்பினர். சில பாடசாலைகளில் குறைந்த எண்ணிக்கையில் காணப்பட்ட மாணவர்கள் பின்னர் நேரகாலத்துடன் வீடுதிரும்ப அனுமதிக்கப்பட்டனர். பொதுப் பரீட்சைகள் பலவும் ரத்துச்செய்யப்பட்டன.

பிரதான வீதிகளில் காலை முதல் ரயர்கள் எரிக்கப்பட்டன. வீதிகள் போக்குவரத்து இன்றி வெறிச்சோடின. ஆத்திரமடைந்த இளைஞர் குழுக்கள் பல இடங்களிலும் படையினரை எதிர்த்து அவர்களின் நடமாட்டத்தை

(14ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றிரவு கிரனேட் வீச்சில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், டிசெ.3

நேற்றிரவு யாழ். பிறவுண் வீதி பகுதியில் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தின் போது ஒருவர் படுகாயமடைந்தார்.

7.30 மணியளவில் பிறவுண் வீதியில் இந்து மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக அமைந்துள்ள படையினரின் காவலரணை இலக்கு வைத்து கிரனேட் வீசப்பட்டது.

இதன்போது ஏழாலையைச் சேர்ந்த 35 வயதுடைய எஸ்.சிவநேசன் என்ற குடும்பஸ்தர் மார்புப் பகுதியில் படுகாயமடைந்தார். இவர் பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

ஏழாலையில் இருந்து மோட்டார் சைக்கிளில் யாழ். நகரப் பகுதிக்கு வந்த சமயம் இவர் காயமடைந்தார். (ஐ-7)

மேலும் ஹர்த்தால் செய்திகள், படங்கள் 2ஆம் 13ஆம் பக்கங்களில்

## தேச விடுதலைப் பற்றாளர்களை அழித்தொழிக்கும் நயவஞ்சகம்!

### கண்காணிப்புக் குழுவுக்கு இளம்பரிதி அவசர அறிவிப்பு



தேசவிடுதலைப் பற்றாளர்களை அழித்தொழிக்கும் நயவஞ்சக நடவடிக்கையில் இராணுவ புலானாய்வுப் பிரிவினரும் ஈ.பி.டி.பியினரும் இணைந்து ஈடுபடுகின்றனர். இதனைத் தடுத்து நிலைமையைச் சுமுகமாக்குவதற்கு கண்காணிப்புக் குழுவினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி. குடாநாட்டில் நேற்று பரவலாக இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக கண்காணிப்புக் குழுத் தலைவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-

கடந்த 30 ஆம் முதலாம் திகதிகளில் பளையிலும் கிளிநொச்சியிலும் யாழ். மாவட்ட, தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர்கள் கண்காணிப்புக்குழுத் தலைவருடனான சந்திப்பை மேற்கொண்டிருந்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் கடைத் தொகுதியில் தீ! ஒரு கடை முற்றாக எரிந்து நாசம்!

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ்.நகரில் ஆஸ்பத்திரி வீதியில் - சத்திரச் சந்திக்குச் சமீபமாக - அமைந்திருந்த வர்த்தக நிலையம் ஒன்று நேற்றிரவு தீக்கிரையானது.

மரக்கறிச் சந்தைப் பகுதியை அண்டிய கடைத்தொகுதியில் இருக்கும் வர்த்தக நிலையம் ஒன்றிலேயே நேற்றிரவு 8.30 மணியளவில் தீ பற்றிக் கொண்டது.

முதலில் பலசரக்குக் கடை ஒன்றில் பற்றிய தீ சிறிது நேரத்துக்குள் அருகே இருந்த ஏனைய கடைகளுக்கும் பரவியது. வர்த்தகர்களும் பொதுமக்களும் இணைந்து தீயை அணைக்க முயன்றனர்.

யாழ். மாநகரசபை தீயணைப்புப் பிரிவினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. எனினும் அவர்கள் தாமதமாகவே - சுமார் ஒரு மணி நேரத்தின் பிறகே - சம்பவ இடத்துக்கு வருகை தந்தனர். அவர்கள் இரண்டு உழவு இயந்திரங்களில் தண்ணீர் பவுஸருடன் வந்தபோதும் அதிலிருந்து நீரைப் பாய்ச்சுவதற்கான மோட்டார் பம்பி சரிவர இயங்காததால் கைகளால் நீரை வாளிகளில் அள்ளியே

(14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான ஐ.நா. பிரதிநிதியை மாற்றக்கோருகிறது சிங்கள அமைப்பு

கொழும்பு, டிசெ.3

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதியை உடனடியாக மாற்றி அந்தப் பதவியில் புதிய ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நேற்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைக் கேட்டுள்ளது.

இது தொடர்பில் மேற்படி இயக்கம் நேற்று வெளிவிவகார அமைச்சருக்குக் கடிதமொன்றை அனுப்பியது. அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளைப் பார்வையிட அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி இலங்கை வந்தபோது, தமிழர் புனர்வாழ்வுக் கழக இயக்குநருக்கும், கிளின்டனுக்குமிடையில் சந்திப்பொன்றை இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப்பிரதிநிதி மிகேல் பேர்மியோ ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறார். இதை நாம் ஆட்சேபிக்கிறோம்.

ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியாக செயற்படாமல் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான

(14ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா நியமனம்

### செவ்வாயன்று பதவியேற்கின்றார்

இலங்கையின் 18ஆவது இராணுவத் தளபதியாக ஜெனரல் சரத் பொன்சேகா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பதவியேற்கவுள்ளார். அவர் அந்தப் பதவி உயர்வுடன் லெப்டினன்ட் ஜெனரல் என்ற தர நிலை உயர்வையும் பெறுகிறார்.

இராணுவத்தினரது ஓய்வு வயதை உயர்த்தி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிறப்பித்திருந்த வர்த்தமானி அறிவித்தலை புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு ரத்துச் செய்துள்ளது.

இதனால், நவம்பர் 5ஆம் திகதியுடன் ஓய்வுபெற்று, பதவி நீடிப்பு பெறவிருந்த இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட ஓய்வுபெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இதையடுத்து, புதிய இராணுவ தளபதியாக சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கும் எதிர்வரும் 17ஆம் திகதியுடன் 55 வயது பூர்த்தியடைகிறது. எனினும், பதவி உயர்வு பெறுவதால் அவர் தொடர்ந்து புதிய பதவியில் நீடிக்க முடியும்.

தமிழீழ விடுதலை புலிகளுடனான இரு

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





பரமேஸ்வராச் சந்தியில் மாணவர் படையினர் முறுகல்

படங்கள் : பிரபா

# நடுவீதியில் படையினர் நிற்க இரு புறமும் ரயர்கள் எரிப்பு!

## பரமேஸ்வராச் சந்தியில் முறுகல் நிலை

யாழ்ப்பாணம்,டிசெ.3

நேற்றைய ஹர்த்தாலின் போது திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தியில் படையினருக்கும் மாணவர்களுக்கும் இடையில் பலத்த முறுகல் நிலை ஏற்பட்டது.

நேற்று அதிகாலையே அதிகளவிலான படையினர் பரமேஸ்வராச் சந்தி மற்றும் அதனை அண்டிய பலாலி வீதிப் பகுதியில் குவிக்கப்பட்டனர். காலையில் அங்கு திரண்ட பெருமளவான மாணவர்கள் வீதித் தடைகளை ஏற்படுத்தி போக்குவரத்தை தடை செய்தனர்.

இதனையடுத்து படையினருக்கும் இளைஞர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் பரமேஸ்வராச் சந்திக்கும் தபால் கட்டைச் சந்திக்கும் இடையில் இராணுவத்தினர் குவிந்து நிற்க ஆத்திரம் அடைந்த மாணவர்கள் அங்கிருந்து படையினர் இருபுறமும் செல்ல முடியாத வகையில் வீதியின் இருமுனைகளில் ரயர்களைப் போட்டுக் கொளுத்தினர்; தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். தம்மைச் சுற்றி - தமது இருபுறமும் - ரயர்கள் கொளுந்துவிட்டெரிய நடுவில் சிக்கிய படையினர் இருபுறத்தாலும் வெளியேற முடியாது அந்த இடத்திலேயே நிற்கவேண்டியதாகப் போய்விட்டது.

பின்னர் மாணவர்களின் எதிர்ப்பு வலுவடைந்ததையடுத்து படையினர் அவ்விடத்திலிருந்து வெளியேறிச் சென்றனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்துக்குச் சென்று பேரவை பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர். (த-7-13-86-111-180)

# தென்மராட்சியில் பரவலாக கிரனேட் வீச்சு சம்பவங்கள்

## மீசாலையில் படையினர் சுட்டு பொதுமகன் காயம்

சாவகச்சேரி, மீசாலை சந்தியில் உள்ள படைக் காவலரண் மீது நேற்று மாலை 5.30 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது. இதனையடுத்துப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்தார்.

சாவகச்சேரி சிவன்கோயிலடியைச் சேர்ந்த துரைராசா குபேரன்(வயது 24) என்பவரே காயமடைந்தார். இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ்.ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

காயமடைந்தவர் வீதி வழியே மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தார். அச்சமயமே சூட்டுக்கு இலக்கானார்.

இதேவேளை -

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் கச்சாய் வீதிச் சந்தி சங்கத்தடி ஆகிய இடங்களில் இரு கிரனேட்டுகள் வீசப்பட்டன. மீண்டும் பிற்பகல் 3 மணியளவில் சங்கத்தடியில் மேலும் ஒரு கிரனேட் வீசப்பட்டது. இந்த கிரனேட் வீச்சுக்களில் படையினர் சிலர் காயமடைந்தனர் என்று கூறப்படுகிறது.

(ஐ-3-31-74-14)

# ஈ.பி.டி.பியினரின் பிக்-அப் மோதியதில் ஓட்டோ சிதறியது! ஐவர் படுகாயம்!!

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ்.நகரை அண்டிய பண்ணைப் பகுதியில் நேற்று மாலை 'பிக்-அப்' வாகனம் ஒன்றும் ஓட்டோவும் மோதிக்கொண்ட கோர விபத்தில் பயணிகள் ஐவர் படுகாயமடைந்தனர்.

இராணுவத்தினரும் ஈ.பி.டி.பி. அமைப்பினரும் இணைந்து பயணம் செய்த 'பிக் - அப்' வாகனமே பயணிகள் ஓட்டோவை மோதியது என்று கூறப்படுகிறது. இதனால் ஓட்டோ சிதறிச் சின்னாபின்னமாகியது. அதில் இருந்த பயணிகள் ஐவரும் படுகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டனர்.

நாவாந்துறைப் பகுதியில் இருந்து சென்ற ஓட்டோவும், தீவுப் பகுதியில் இருந்து வந்த 'பிக் - அப்' வாகனமுமே மோதுண்டன.

சிதறிச் சின்னாபின்னமான ஓட்டோ உடனடியாக லொறியில் ஏற்றப்பட்டு யாழ். பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டது. 'பிக் அப்' வாகனமும் பொலீஸாரால் எடுத்துச்செல்லப்பட்டது.

படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

நாவாந்துறையைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான துரைராஜா உதயகுமார்(வயது 34), கரம்பொன் ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர்களான சேவியர் றோசலின்(வயது 55), தமியான் லூட்ஸ் (வயத63), நாவாந்துறையைச் சேர்ந்தவர்களான மிக்கேல் அன்ன மேரி(வயது 52), சி.கிளி(வயது 46).

இந்த விபத்தை அடுத்துப் பண்ணைப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

(ஐ-12-14-7)

# பரீட்சைக் கடமைபுரியும் உத்தியோகத்தருக்கான செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.3


பரீட்சைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக் கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் எனப் பிரதிப் பரீட்சை ஆணையாளர் ஆ.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (8-11)

மேலும் படங்கள் 13ஆம் பக்கத்தில்



நேற்றைய ஹர்த்தாலின் போது... கொடிகாமம் நகர்ப் பகுதி.

படம் : கொடிகாமம் செய்தியாளர் எஸ்.ரூபன்



இணுவில் வைத்தியசாலை முன்பாக.

படம் : நேசன்

# சவேரியார் குருத்துவக் கல்லூரியின் வெள்ளி விழா நேற்று ஆரம்பம்

## பாப்பரசரின் பிரதிநிதியும் கலந்துகொண்டார்

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ்.புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின.

நேற்று ஆரம்பமான முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக பரிசுத்த பாபரசர் 16ஆம் ெனடிக்ற்றின் இலங்கைக்கான பிரதிநிதி அதிமேற்றிராணியார் மரியோ செனாரி ஆண்டகை கலந்துகொண்டார்.

நேற்று மாலை 5.45 மணிக்கு புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நிகழ்வு ஆரம்பமானது.

பாப்பரசரின் கொடியை பாப்பரசரின் பிரதிநிதி செனாகி ஆண்டகை ஏற்றிவைக்க குரு மடக் கொடியை யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஏற்றிவைத்தார். இதன் பின்னர் திருமறைக் கலாமன்ற மாணவர்களின் வரவேற்பு நடனம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து வரவேற்புரையை குருமட அதிபர் அருட்திரு.எஸ்.வி.பி.மங்களராஜா அடிகளும் அறிமுக உரையை யாழ். மறை மாவட்ட ஆயரும் நிகழ்த்தினர். வெள்ளிவிழாவை முன்னிட்டு நூல் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. பின்னர் பிரதம விருந்தினர் அதிமேற்றி ராணியார் மரியோ செனாரி ஆண்டகை உரையாற்றினார்.

'யாழ். கோட்டையில் சிந்திய குருதி' என்ற நாட்டுக் கூத்தும் அங்கு மேடையேற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் உட்பட குருக்கள், கன்னியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (8-12-14)



யாழ். ஆயருடன் பாப்பரசரின் பிரதிநிதி

படம் : பகீரதன்

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# இது நல்லதற்கல்ல!

இலங்கையின் புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா எதிர்வரும் செவ்வாயன்று பதவியேற்கின்றார். லெப்டினன்ட் ஜெனரல் என்ற தரநிலை உயர்வோடு இந்தப் பதவி உயர்வை அவர் பெறுகின்றார்.

யுத்த களத்தில் சிறப்பாகப் போராடிய வீரர் இவர் என்று தென்னிலங்கை புகழ்கின்றது.

இப்போது இராணுவத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்றுச் செல்பவர் லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொட. இவருக்கு முன்னர் இருந்தவர் ஜெனரல் லயனல் பலகல்ல.

ஜெனரல் லயனல் பலகல்ல ஓய்வுபெறும் நிலையை எட்டிய சமயம் அடுத்த இராணுவத் தளபதி யார் என்ற இழுபறிநிலை ஏற்பட்ட போது ஜெனரல் கோட்டே கொடவின் பெயரும், ஜெனரல் சரத் பொன்சேகாவின் பெயரும் அடிபட்டன.

ஜெனரல் கோட்டெகொட, முன்னர் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் அரசு - புலிகள் பேச்சு நடைபெற்ற சமயம் அரசுத் தரப்புப் பேச்சுக் குழுவுக்கு உதவியாக பேச்சுகளில் இராணுவப் பிரதி நிதியாகக் கலந்துகொண்டவர்.

மறுபுறத்தில் அரசு - புலிகள் பேச்சுகளில் எட்டப்பட்ட உடன்பாட்டை நடைமுறைப்படுத்த விடாமல் தடை போட்டவர் என்ற பெருமைக்குரியவர் ஜெனரல் பொன்சேகா.

இதனால், ஜெனரல் பலகல்லவுக்கு அடுத்த தளபதி யார் என்ற சர்ச்சை எழுந்தபோது பேச்சுக்கு உதவிய இராணுவ அதிகாரியைவிட, பேச்சுக்கு முட்டுக்கட்டை போட்ட இராணுவ அதிகாரி பக்கமே தென்னிலங்கை பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்கு சக்திகள் அணி திரண்டன. எனினும், அச்சமயத்தில் அந்தச் சக்திகளுடன் அரசியல் ரீதியாக முரண்பட்டு நின்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - அதற்காக - ஜெனரல் சாந்த கோட்டேகொடவை இராணுவத் தளபதியாக நியமித்தார்.

இப்போது அதே பேரினவாத சக்திகளின் கூட்டினால் ஜனாதிபதிப் பதவியைப் பிடித்திருக்கும் மஹிந்த ராஜபக்ஷ, அந்த சக்திகளைத் திருப்திப்படுத்தும் விதத்தில் அவற்றின் விருப்புக்குரியவரை உடனடியாக இராணுவ உயர் பதவிக்கு நியமித்திருக்கிறார்.

முன்னைய ஐ.தே. முன்னணி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுகளின் ஆரம்பத்தில் - பாங்கொக்கில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுகளின் போது - பல்வேறு உபகுழுக்கள் அமைக்கப்பட்டன. அவற்றில் ஒன்று - இராணுவ நெருக்குவாரங்களைத் தணித்து இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராயும் உபகுழு. அந்த உபகுழுவில், இப்போது புதிய இராணுவத் தளபதியாகப் பதவியேற்கவிருக்கும் ஜெனரல் சரத் பொன்சேகாவும் முக்கிய உறுப்பினர். அவர் அப்போது யாழ். இராணுவத் தளபதியாக இருந்தார்.

இந்த உபகுழுவின் முதல் கூட்டம் முகமாலை சூனியப் பிரதேசத்தில் 2002 ஆம் ஆண்டில் டிசம்பர் 14ஆம் திகதி நடைபெற்றது.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வடக்கில் அரச இராணுவம் ஆக்கிரமித்த பிரதேசங்களிலிருந்து விலகி, மக்களை மீளக் குடியமர வழிசெய்து, இயல்பு நிலைமை ஏற்படுவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஓர் அறிக்கையை யாழ். இராணுவத் தளபதி பொன்சேகா அடுத்த ஒரு வாரத்துக்குள் சமர்ப்பிக்கவேண்டும் என்று அந்த உபகுழுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி பொன்சேகா சமர்ப்பித்த அறிக்கை கண்காணிப்புக் குழு ஊடாக புலிகளுக்கு அனுப்பப்பட்டது.

அதில் - அப்போது இலங்கை அரசுடன் சமமாக ஒரே அந்தஸ்தில் அமர்ந்திருந்து சமாதானப் பேச்சுகளை நடத்திக் கொண்டிருந்த புலிகளை 'பயங்கரவாதிகள்' என்று சுட்டினார் ஜெனரல் பொன்சேகா.

ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதியை மீள மக்கள் குடியமர அனுமதிக்க வேண்டும் என்ற யுத்தநிறுத்த உடன்பாட்டு ஏற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு, 'விடுதலைப் புலிகள் தமது தூர இலக்கு ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும்.' - என்று தமது அறிக்கையில் நிபந்தனை விதித்தார் அவர்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அரசுப் படைகள் ஆக்கிரமித்திருக்கும் இடங்களை மக்களிடம் மீளக் கையளித்தால், அது புலிகளுக்கு பெரும் 'அரசியல் வெற்றி'யாகிவிடும் என்று குறிப்பிட்ட பொன்சேகா, அப்படிச் செய்யவேண்டாம் என்று அரசை அந்த அறிக்கையில் எச்சரித்தார்.

பொன்சேகாவின் கடும் - தீவிர - அதிகார மிடுக்குப் போக்கால் அந்த உபகுழுவே செத்துவிட்டது என்று அறிவித்துக் கைவிடும் நிலைக்குப் புலிகள் செல்லவேண்டியதாயிற்று.

அது மாத்திரமல்ல, ஜெனரல் பொன்சேகா போன்றோரின் அதிகார அழுத்தத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல், அமைதி முயற்சிகளில் ரணிலின் அரசு அதிகார வறுமையில் சிக்கி, உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்காமல் போக, அமைதி முயற்சிகளும் - சமாதான நடவடிக்கைகளும் - இடைநிறுத்தப்பட வேண்டியனவாயிற்று.

இவ்வாறு முன்னர் சமாதானப் பேச்சுகளுக்கு இடைஞ்சல் விளைவித்து, ஆப்பு வைத்த செயற்பாடுகளுக்குக் காரணமாக அமைந்தவர்களில் ஒருவர் புதிய ஜனாதிபதியின் விருப்புக்குரியவராகி, இராணுவத் தளபதியாக நியமனம் பெறுகின்றார்.

பௌத்த, சிங்களத் தீவிரப் போக்குடைய ரட்ணசிறி விக்கிரமநாயக்க புதிய பிரதமர்.

ஹெல உறுமயவில் இணைந்து பேரினவீாதக் கருத்துகளைக் கக்கிவந்த முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதிபர் கொட்டகதெனியாவுக்கு பாதுகாப்பு அமைச்சில் முக்கிய பொறுப்பு.

தமிழர்கள் வகை தொகையின்றி காணாமற்போன நிலைமைக்குக் காரணமானவர் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்கான முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா கூட்டுப் படைகளின் தளபதிப் பொறுப்புக்கு நியமிக்கப்படலாம் என்றும் பேச்சடிபடுகின்றது.

போதாக்குறைக்கு பேரினவாதச் சிந்தனையுள்ளோர் எல்லோரும் புதிய ஜனாதிபதி மஹிந்தவுக்குப் பின்னால் ஓரணியில்.

இந்த நிலையில் சமாதானம் பகல் கனவு என்பது உறுதியாகி வருகிறது.

தமிழர்மீது அடக்குமுறையைத் திணிக்கும் சிந்தனைப் போக்குடையோரை அதிகார பீடத்தில் உறுதிப்படுத்துவது நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல.





# இந்திய தென்பிராந்திய இராணுவத்தளபதி ஓமந்தை சோதனைச் சாவடிக்கு விஜயம்

## முன்னரங்க நிலைவரத்தை நேரில் பார்வையிட்டார்

வவுனியா,டிசெ.3

ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்தியாவின் தென்பிராந்திய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் பி.எஸ். தக்கார் நேற்றுமுன்தினம் ஓமந்தை சோதனை நிலையத்துக்கு விஜயம்செய்து பாதுகாப்பு நிலைவரங்களைப் பார்வையிட்டார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை ஹெலிகொப்டர் மூலம் வவுனியாவுக்கு வந்த அவர், வன்னி இராணுவத் தளபதியை யோசப் முகாமில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

தொடர்ந்து ஓமந்தை சோதனை நிலையங்களுக்குச் சென்றஅவர் இராணுவ மற்றும் விடுதலைப் புலிகளின் சோதனை நிலையத்திற்கு இடையிலானபோக்குவரத்து நிலைமைகள் குறித்து பார்வையிட்டதுடன், இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் பொலீஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

முன்னரங்க காவல் நிலையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றுப்பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் இராணுவத் தளபதி பி.எஸ். தக்கார் கலந்துரையாடினார் என்றும் -

வவுனியா மாவட்டத்தின் முக்கியத்துவம் அந்த மாவட்டத்தின் பாதுகாப்புநிலைமைகள்குறித்தும் அவர் விரிவாக ஆராய்ந்து கேட்டறிந்தார் என்றும் -தெரிவிக்கப்பட்டது. (எ-164-202)

# நிலத்தடி நீர் மாசடைவதைத் தடுக்க புதிய முறையில் மலசலகூடங்கள்

## வரைபடம் தயாரிப்பு இடம்பெறுகின்றது என்கிறார் அரச அதிபர்

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலகமாக நிலத்தடி நீர் மாசடைந்து வருகின்றது. இதனைத் தடுக்கும் முகமாக மலசலகூடங்களைப் புதியமுறையில் நிர்மாணிப்பதற்கான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஸ் தெரிவித்தார்.

அண்மை நாள்களாக நிலத்தடி நீர் மாசுபடுவது அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த நிலையில் இதனைத் தடுக்கவேண்டியது அவசியமானதும், அவசரமானதும் ஆகும். இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 28ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

யழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நீர் தொடர்பாகப் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் முக்கியமானவை வருமாறு:-

✱ நிலத்தடி நீர் பாதிப்படைவதில் மலசலகூடங்கள் பெரும் பங்களிக்கின்றன. இதனை மலசலகூடங்களைப் புதிய முறையில் நிர்மாணிப்பதன் மூலம் நிலத்தடி நீரைப் பாதுகாக்கமுடியும். எனவே, புதிய முறையில் அமைந்த மலசலகூட வரைபடத்தைத் தயாரித்து முதற்கட்டமாக ஆழிப்பேரலை பாதித்த மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளிடம் கையளித்தல்.

✱ ஆழிப்பேரலை பாதித்த மக்களுக்குச் சுத்தமான குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

✱ மக்கள் பயன்படுத்தும் கிணறுகளுக்கு குளோரின் இட்டு சுத்திகரித்தல், சுத்தமான குடிதண்ணீரின் அவசியம் பற்றி மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கல்.

✱ உள்ளூராட்சித் திணைக்களங்களால்மேற்கொள்ளப்பட்டுவரும் நீர் விநியோகத்துக்குப் பயன்படுத்தப்படும் கிணறுகள், புதிதாக அமைக்கப்படும் கிணறுகள் என்பவற்றை அவதானித்தல்.

'ரவ்ரன்' அமைப்பின் இணைப்பாளர் திருமதி கமலாசிவசிதம்பரம் நீர் வடிகாலமைப்பு சபைப் பிரதி முகாமையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச சபை அதிகாரிகள், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.(எ-204-203)

# சர்வதேச ரீதியான நாள்காட்டியில் குடாநாட்டு மாணவரின் ஓவியங்கள்!

எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டுச் சுகாதாரத் திணைக்களத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சுவரொட்டி ஓவியப் போட்டியில் முதல் மூன்று இடத்தைப் பெற்ற மாணவர்களின் ஓவியங்கள் அடுத்த ஆண்டு யுனிசெப் அமைப்பினால் சர்வதேச ரீதியாக வெளியிடப்படவுள்ள நாள் காட்டியின் முகப்பு அட்டைகளில் அச்சிடப்படவிருக்கின்றன.

சுமார் 5 ஆயிரம் நாள்காட்டிப் பிரதிகள் அச்சிடப்பட்டு சர்வதேச ரீதியாக வெளியிடப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

போட்டியில் ஆர்வத்துடன் கலந்துகொண்ட மாணவர்களின் ஆக்கத்திறன்களை வளர்த்து அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற த.இளையராஜா, (காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய ம.வி.) இரண்டாம் இடத்தைப்பெற்ற ப.பிரசாந் (சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி), மூன்றாம் இடத்தைப் பெற்றவர்களான கி.நிஷாந்தன் (இணுவில் மத்திய கல்லூரி), என்.நிசாந்தன் (கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகிய மாணவர்களின் ஓவியங்களே நாள் காட்டியில் பிரசுரிக்கப்படவுள்ளன. (த-13)

# 49 மாணவர்களுக்கு நாளை கௌரவிப்பு

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 49 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வர்த்தக வங்கியின் யாழ். கிளையில் இடம்பெறவுள்ளது.

வங்கியில் சேமிப்புக் கணக்குகளை வைத்துள்ள மாணவர்களில் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களை வர்த்தக வங்கி வருடா வருடம் கௌரவித்து வருகின்றது.இந்த வகையில் இந்த வருடம் 49 மாணவர்கள் கௌரவிப்புப் பெற தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர் கள் நாளை கௌரவிக்கப்படுவர். பாராட் டுரைகளும் இடம்பெறும். (எ-3)

## நாளை

கார்த்திகை 19
ஞாயிற்றுக்கிழமை
04.12.2005
திதி: திருதியை
பிற்பகல் : 04.28வரை
நட்சத்திரம் : பூராடம்
முன்னிரவு : 08.34 வரை
சுபநேரம்: 09.15- 10.45
ராகுகாலம்:04.45 - 06.15
(யாவும் பழைய நேரப்படி)

# வட்டுக்கோட்டையில் ஒரு பகுதிக்கு சிந்துபுரம் என்ற தூயதமிழ்ப் பெயர்

## மாவீரர் தினத்தை முன்னிட்டு பெயர்ப்பலகை திரைநீக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.3

மாவீரர்தினம், தேசியத் தலைவரின் 51ஆவது அகவைபூர்த்தி என்பவற்றை முன்னிட்டு, வட்டுக்கோட்டை காந்திஜி சனசமூக நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிக்கு அப்பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து 'சிந்துபுரம்' என்ற பெயரைச் சூட்டி பெயர்ப் பலகையினைத் திரைநீக்கம் செய்துள்ளன.

அத்துடன், அப்பகுதியில் உள்ள பொதுச் சந்தைக்கு சிந்துபுரம் பொதுச்சந்தை (பொது அங்காடி) என்ற பெயரையும் சூட்டியுள்ளனர்.

வட்டுக்கோட்டை, காந்திஜி சனசமூக நிலையம், வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம், கிராம அபிவிருத்திச் சங்கம், நாட்டுக் கூத்து அபிவிருத்திக் குழு, இந்து சமய அபிவிருத்திச் சங்கம், கல்வி வளர்ச்சிக்கழகம்,ஐக்கிய நாணய சங்கம் போன்ற பொதுஅமைப்புகள் ஒன்றிணைந்தே இந்தப் பெயர்ப்பலகையினை திரை நீக்கம் செய்தன.

இப்பகுதிக்கு 'சிந்துபுரம்' என்ற பெயர் பண்டைக்கால இலக்கியங்களிலும், வரலாறுகளிலும் பாவனையில் இருந்து வந்தது என்றும் -

நாளாந்த மக்களின் பாவனையில் இப்பெயர் பயன்படுத்தாமல் மறைந்து வருவதாலும், மக்களிடையே இப்பெயரை மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் முகமாகவும் -

தனித்தமிழ் பயன்பாட்டை வழக்கத்திற்குக் கொண்டுவரும் வகையிலும் - இப்பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நிகழ்வில் உரையாற்றிய காந்திஜி சனசமூக நிலையச் செயலாளர் தி.சிவவண்ணன் தெரிவித்தார்.

இதேவேளை, இப்பகுதியில் மாவீரர் தின நிகழ்வு, மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு என்பன சிறப்பாக நடைபெற்றன. இந்நிகழ்வுகளுக்குப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். (த-12)

## உதயவாக்கு

காலத்தின் மதிப்பு உனக்குத் தெரிந்திருக்குமானால் உனது வாழ்வின் மதிப்பும் தெரிந்திருக்கும்.

- நெல்சன்

# தகவல் தொழில்நுட்பத்தில் சான்றிதழ்பெற விண்ணப்பம்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதி காரசபையின் கீழ் தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற் கான கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் யாழ்ப்பாணம், வட்டுக் கோட்டை, வவுனியா ஆகிய பயிற்சி நிலை யங்களுக்கு விண்ணப்பிக்கமுடியும்.

6 மாதகால முழு நேரப் பயிற்சிநெறியாக இது நடத்தப்படவுள்ளது.

மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பவர் கள் ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியும் ஏனைய பாடசங்களில் திறமைச் சித்தியும் பெற் றிருக்கவேண்டும் அல்லது கணிதம், ஆங் கிலம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும்.

அத்துடன், விண்ணப்பதாரர் 25 வயதுக் குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

தகுதியானவர்கள் தமது சுயவிவரம் அடங் கிய விண்ணப்பங்களை 'மாகாணப் பணிப்பாளர், வடமாகாண அலுவலகம், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, இல.7, கோயில் வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முக வரிக்கு எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (எ-203)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**உடற்கல்வி டிப்ளோமா முதலாம் (1) இரண்டாம் (2) ஆண்டுப் பரீட்சை 2004/2005**

உடற்கல்வி டிப்ளோமா முதலாம் (1) இரண்டாம் (2) பரீட்சைகள் 28-12-2005 அன்று ஆரம்பமாக உள்ள தால் மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் பொருத்தமான பரீட்சார்த்திகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

12-12-2005 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ விளையாட்டு விஞ்ஞான அலகில் பதிவினை மேற் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(சி-46490) (11-13-18) **-பதிவாளர்.**

## அசெம்பிளிஸ் ஒவ் கோட் வேதாகம கல்லூரி யாழ். விரிவாக்க நிலையம்

*2006 இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

இறையியலின் டிப்ளோமா

*(இரு வருட முழுநேர கல்வியும் பயிற்சியும்)*

- வேதாகமத்தை முதன்மையாகக் கொண்ட பாடநெறி
- சமூகத்தையும் தேசத்தையும் ஆதாயம் செய்ய மாணவரைத் தயார் செய்தல்
- ஜெபம் கல்லூரியில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

*உலகம் முழுவதிலும் உள்ள ஆயிரக்கணக்கான அசெம் பிளிஸ் ஒவ் கோட் மாணவர்களில் நீங்களும் ஒருவராவீர் கள்.*

*விண்ணப்பப் படிவங்களுக்கும் விவரங்களுக்கும் ....*

**இல.10A, சபீற்றல் வீதி, யாழ்ப்பாணம்.**

*செவ்வாய் முதல் வெள்ளி வரை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரை நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.*

*விண்ணப்பத்திற்கான இறுதிநாள் 16.12.2005 வெள்ளிக் கிழமை.*

(43513) (11-13-18)

**அசெம்பிளிஸ் ஒவ் கோட், வேதாகம கல்லூரி, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

## கந்தையா தங்கராஜா



சாவகச்சேரி , நுணாவில் மேற்கைப் பிறப் பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தங்கராஜா அவர்கள் 01.12.2005 அன்று வவுனியாவில் கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா- கண் மணியின் அன்பு மகனும் மகேஸ்வரியின்அன் புக் கணவரும்சுபத்திரா, ஷோபனா, கேசவன், ஷோபிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சசிதாசன் (ஜேர்மனி), குலேந்திரராஜா (சுவிஸ்) ஆகி யோரின் பாசமிகு மாமனும் சௌமியாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற நல்லையா, சுப்பிர மணியம், செல்லையா, நடேச துரை மற்றும் பொன்னுத்துரை, யோகம்மா,மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதர னும் தங்கேஸ்வரி, இரத்தினசபாபதி (கண்ணன்), கணேஷபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2005) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சனாங்குளம் இந்து மயானத் துக்கு எடுத் துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.30, 7 ஆம் ஒழுங்கை, வேப்பங்குளம், வவுனியா.*

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

(சி-46493)(11-13-18)

## மனோகரா யாழ்ப்பாணம்




## ராஜா யாழ்ப்பாணம்

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவில் 200 நாள்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்.

*சுப்பர் ஸ்ரார் ரஜனி, இளையதிலகம் பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல், வினித், விஜயகுமார் நடித்த*

**சந்திரமுகி** காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30,

## நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக

அர்ஜுன், நமிதா, வடிவேல் நடித்த

**ஆணை** தினசரி புது நேரம் 11.00, 3.00, 7.00,10.00

## DIPLOMA IN COMPUTER HARDWARE CLASSES

**SPEED BATCH ONLY 4 WEEKS**

GROUP CLASSES

Only For 10 Office Staffs

Days:- Fri,Sat, Sun.

Time:- 5.00p.m

Fees:1500/=

Batch Starts on 04-12-2005

**C.B Computer Academy**

T.P No. 021-4590291 Station Road, Kondavil.

## மணமகள் தேவை

இந்து குடும்பம், வயது 32, நட்சத்திரம் திரு வோணம், மகராசி, செவ்வாய்க் குற்றம் இல்லை, கல்வி **B.Sc.Bio Chemistry** லண்டனில் நிரந்தர உத்தியோகம் பார்க்கும் அழகான வாலிபருக்கு

A/L சித்தியடைந்த அல்லது அதற்கு மேல், அழகான மணமகள் தேவை. பெண்ணுக்கு செவ் வாய், சூரியன் ஒரே வீட்டில் இருக்க வேண்டும். அல்லது செவ்வாய் இருக்கும் வீட்டிலிருந்து சூரியன் 4ஆம் வீடு, 7ஆம் வீடு, 8ஆம் வீட்டில் இருப்பது விரும்பத்தக்கது. உத்தரட்டாதி, ரேவதி நல்ல நட்சத்திரங்கள். தாய், தந்தையர் இளைப் பாறிய அரசாங்க உத்தியோகஸ்தர்கள் புகைப் படம், ஜாதகக் குறிப்புடன் வாருங்கள் (தரகுப் பணம் இல்லை)

தொடர்பு:- **பொ.பாலச்சந்திரன்** (இளைப்பாறிய உள்ளூராட்சி அரச உத்தியோகத்தர்)

Church Lane, K.K.S.Rd., Kokuvil East, Kokuvil.

### கலைஞர்கள் கௌரவிப்பு

யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் இன்று நடைபெறவுள்ள 40 ஆவது வருடப் பூர்த்தி நிகழ்வின் போது யாழ். திருமறைக் கலாமன் றத்தின் மூத்த தலை வர்களான ஏ.வீ.ஆனந் தன், எம்.ஜேசுதாசன், பேக்மன் ஜெயராசா ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்படவுள் ள னர். இந்நிகழ்வு யாழ். திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேரா சிரியர் அருட்திரு.மரி யசேவியர் அடிகளார் தலைமையில் நடைபெறும்.

### இளவாலையில் உதைபந்தாட்டம்

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி யின் நூற்றாண்டு விழா வினை முன்னிட்டு யங் கென்றீசியன் விளையாட்டுகழகம் மாவட்ட ரீதியில் நடத் தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று பிற்பகல் 3.30 மணியள வில் கல்லூரி மைதானத் தில் ஆரம் பமாகின் றது.

இன்றைய போட்டி யில் பங்குபற்றும் அணி களின் விவரம் வரு மாறு:-

- பிற்பகல் 3.30 மணி - மயிலங்காடு ஞான முருகன் வி.க. எதிர் கர வெட்டி நவ சக்தி வி.க.
- பிற்பகல் 4.30 மணி - மானிப்பாய் றெட் றேஞ்சர்ஸ் வி.க. எதிர் அராலி சில்வெஸ்ரார் வி.க.

(3-190)

## துயர் பகிர்கின்றோம்

மு/கோப்பாபுலவு அ.த.க.பாடசாலை அதிபரின் அன்புத் தாய்

*திருமதி கனகசிங்கம் மனோன்மணி* அவர்கள் 27-11-2005 அன்று இறைபதம் எய்தியதை இட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**நண்பர்கள்,**
**ந.ரங்கநாதன், செ.யோகேஸ்வரன், செ.யோகதாஸ்.**

(சி-46499)(11-13-18)

## THE ASSOCIATION FOR HEALTH AND COUNSELLING SHANTHIHAM

Applications are called from the candidates who possess the required qualifications for the posts indicated below:

a. Personnel Assistant - 1 No

**Qualifications**

- Passed G.C.E. (A/L) examination
- G.C.E. (O/L) with minimum 5 credits inclusive of English Language
- Knowledge in Computer working with e - mail operations
- Knowledge in Short hand and typing (English and Tamil)
- Experience in office administration, filing system would be an added qualifications
- Should be able to draft letters independently
- Age below 35 Years

Salary Negotiable

b. Accounts Clerk (Project based) - 1 No

**Qualifications**

- Passed G.C. E. A/L with accounts related subjects
- Part qualified H.N.D.A. (either year 2 or 3 )
- Computer literacy with knowledge in operating email
- Minimum 2 years work ing knowledge in the related field
- Age below 30 years

Salary Negotiable

Only short listed candidates would be called for interview

Applications closing date 07.12.2005

To be forwarded to :
Executive Director,
Shanthiham,
No. 15, Kachcheri Nallur Road, Jaffna.

## Jayoda ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7321080 முதல் 7331420 வரை சீட்டிழுப்பு இல. 190 திகதி 01-12-2005

வெற்றி எண்கள் **4 0 7 1 5 2** சுப்பர் எண் **09**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,23,54,925/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,23,54,925/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/- | 4,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 92 | 5,000/- | 4,60,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 905 | 500/- | 4,52,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,989 | 50/- | 4,49,450/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 89,139 | 10/- | 8,91,390/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 94 | 1,000/- | 94,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 899 | 100/- | 89,900/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,910 | 20/- | 1,78,200/- |
| | | மொத்தம் | 41,10,440/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 47,13,040/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. **1,26,05,050/-**

தொடர் இல. 6404250 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 டிசம்பர் 05 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

| | |
|---|---|
| நுவரெலியா | 7323273-0-96 |
| கண்டி | 7324740-3-74 |
| கேகாலை | 7324548-0-96 |
| புத்தளம் | 7325771-0-58 |
| காலி | 7327312-0-38 |
| திருகோணமலை | 7323167-2-32 |
| கம்பஹா | 7328281-7-46 |
| மொனராகலை | 7327554-9-89 |

# வல்லையின் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்ந்தவர்

## நீத்தார் நயப்புரை



ஒருவர்வாழும் காலத்திலே செய்த சேவைகள் அவர் மறைந்த பின்னும் வாழ்பவர்களால் பேசப்படும்.அந்த வகையில் மறைந்தும் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் ஒருவர் தான் வல்வையைச்சேர்ந்தஅருணாசலம் தில்லையம்பலம் (கீச்சி அப்பா)

ஊரும் அதன் பழைய பண்பாடுகளும் மூத்தோர்களால்தான் இளையவர்களுக்கு கடத்தப்படுகின்றன.

நான்கு தலைமுறையைக் கண்ட அருணாசலம் தில்லையம்பலம் 1903 ஆம்ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் திகதி பிறந்தார்.

103 வயது வரை வாழ்ந்த இவர், சமூகத்திற்கும் கிராமத்திற்கும் பெரும் தகவல் பெட்டகமாகத் திகழ்ந்தவர். இவரிடம் இருந்துதான் பழைய சம்பிரதாயங்கள், வரலாற்றுக் குறிப்புகள், சமயக் கருத்துக்கள் பலராலும் அறியப்பட்டன. அமெரிக்காவுக்குச் சென்ற'அன்னபூரணி'கப்பல் தொடர்பான புத்தகம் இவரது தகவல்களின் அடிப்படையில் தான்உருவாக்கப்பட்டது. இவரது ஞாபகச் சக்தி, அறிவுத்திறன் என்பவற்றைக் கண்ட இந்தப் பகுதி மக்கள் 'வல்வையின் வரலாற்றுப் பெட்டகம்' என அழைத்தனர்.

தெய்வபக்தியும் அறிவுத் திறனும் கவிப் புலமையும் மிக்க இவர் வல்வை முத்துமாரி மீது தாலாட்டுப் பாடல்பாடி புத்தகமாக வெளியிட்டார்.

கிருபானந்த வாரியாரின் நெருங்கிய நண்பராக விளங்கினார்.கிருபானந்த வாரியார் இறப்பதற்கு முன்னர் இவருக்கு எழுதிய கடிதங்கள்இன்றும்இவர் புகழை பேசுகின்றது.

சமூகமுன்னேற்றத்தில் அக்கறை கொண்டு செயற்பட்ட இவரின் இழப்பு வல்வை மக்களுக்கு பேரிழப்பாகும். வல்வை சிதம்பராக் கல்லூரி இவரது 100 ஆவது வயதினை பெருஞ் சிறப்புடன் கொண்டாடியது. மறைந்தும் மக்கள் மனங்களில் வாழும் பெரியோர்களில் இவரும் ஒருவர்.

- கரவை சுந்தர்.

# மக்கள் முகம்



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர் பரமசிவம் சிவகுமார் லண்டனிலுள்ள றோயல் சுயாதீன பல்கலைக்கழகத்தின் லண்டன் மருத்துவக் கல்லூரியில் கௌரவ சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது லண்டன் லூட்டன் மற்றும் டன்ஸ்டபிள் மருத்துமனையில் சிறுவர் மருத்துவத்துறை ஆலோசகராக இருந்து வருகிறார். யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த டாக்டர் சிவகுமாரன் (MBBS, FRCP, FRCPCLL, DCH) லண்டன் முதலாய பட்டங்களைப் பெற்றவர்.

சமீபத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது இலங்கை வந்திருந்த டாக்டர் சிவ குமார் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்ஆலோசனை சேவைகளை வழங்கிய துடன் நூற்றுக் கணக்கான சிறுவர்களுக்கு சிகிச்சையும் வழங்கினார். நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நல்லூர் ஜமுனா வீதியைச் சேர்ந்த வல்லிபுரம் பரமசிவம் (ஜே.பி). திருமதி சரஸ்வதி பரமசிவம் தம்பதியரின் மூத்த புதல்வர் இவர். (ப)

* * *



கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை அமைச்சு இந்த வருடம் நடத்திய அரசவேவையாளர்களுக்கான போட்டியில் யாழ். மாவட்டத்தில் கிராம சேவையாளர் மட்டத்தில் மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த இராஜவல்லவன் இராஜயோகன் 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இதுதவிர கவிதைப் போட்டியிலும் பங்குபற்றி சிறந்த கவிதைகளில் ஒன்றாக இவரது கவிதையும் தெரிவுசெய்யப்பட்டது.

கடந்த வருடம் சிறுவர் கதைக் போட்டியில் பங்குபற்றிச் சிறந்த சிறுகதைகளுள் ஒன்றாக இவரது சிறுவர்கதையும் தெரிவுசெய்யப்பட்டது.

இவற்றுக்கான சான்றிதழ்கள் தேசிய நூதன சாலைக் கேட்போர் கூடத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டன. மானிப்பாய் தெற்கு கிராம சேவையாளராகக் கடமையாற்றும் இவருக்கு, வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட கலைஞர் கௌரவிப்பின் போது 'கலை ஞாயிறு' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

சமாதான நீதிவனான இவர், சிறுகதைகள், கவிதைகள் எழுதியுள்ளார். (3-100-204)

# தலைமைத்துவப் பண்புகளை செயலில் காட்டிய பெரியார்

## பெரியார் நினைவு

எமது பிரதேசத்திலுள்ள சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களை இணைத்து, அதற்கென ஒரு சமாசத்தை ஸ்தாபிப்பதில் பெரிதும் பங்காற்றிய பெரியார் அமரர் ஞானப்பிரகாசம் அவர்கள்.

அமரர் ஞானப்பிரகாசம் அரச பொது எழுதுநர் சேவை மூலம் மக்கள் சேவையை ஆரம்பித்து இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியெய்தியபின் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளராகக் கூட்டுறவுத்துறையில் இணைந்து, சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவிஉயர்வுபெற்று சேவையாற்றி ஓய்வு பெற்றவர்.

வெறுமனே ஒரு அரச அதிகாரியாக அல்லது ஆணையாளராகப் பணியாற்றாது கூட்டுறவையும், அதன் கொள்கைகளையும் உண்மையாகவே நேசித்து அதன் உயர்வுக்காக உழைத்த ஒருவர். கூட்டுறவு மீது அசையாத நம்பிக்கையும், பற்றும் மிக்க இவர் இத்துறையினூடாக நலிவடைந்த மக்களிற்கு தன்னாலான பணிகளை ஆற்றத் தனது சொந்த நேரங்களைக்கூட பெருமளவில் பயன்படுத்தியவர்.

அதிகாரியாக பார்க்கும் போது சற்று கடுமையானவராக இருந்த போதும், கூட்டுறவாளனாகத் திகழ்ந்தபோது மிகவும் கருணையுள்ளவராக வாழ்ந்தார். சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச்சங்களைக் கிராமிய மட்டங்களில் புனரமைக்கவும், புதிய சங்கங்களைப் பதிவு செய்யவும் அவர் கிராமம், கிராமமாகச் சென்று நேரடியாகக் களத்தில் நின்று பிரசாரங்களை மேற்கொண்டார். மகளிர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதிலும், மகளிர் சுயமுயற்சி தலைமைத்துவம், என்பவற்றை வளர்ப்பதிலும் அதிக கவனம் செலுத்தினார். சிக்கன, சேமிப்பு, கூட்டுறவு முயற்சி பற்றி கிராமிய மட்டத்தில் இவரால் செய்யப்பட்ட பிரசார வேலைகள் கிராமிய மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

இவரது முயற்சியின் பயனாகவே யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தோற்றம் பெற்று விரைவாக வளர்ச்சியடைய முடிந்தது. தனது ஓய்வு காலத்தில் இதன் தலைவராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். இக்காலத்தில் மாணவர் சேமிப்பு, நிலையான வைப்பு, மகளிர் சேமிப்பு, வங்கிச் சேவை, சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கான முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தினார். இவரின் பணியை யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் மறந்து விட முடியாது.

கூட்டுறவு தலைமைத்துவம் என்பது வெறும்னே கதிரைகளை அலங்கரிக்கும் பதவிகள் அல்ல என்பதை பெரியார் அமரர் ஞானப்பிரகாசம் செயலில் காட்டிச் சென்றுள்ளார். அவரது கூட்டுறவுப் பணிகளை, அவரது கூட்டுறவு வாழ்வைப் பாடமாகக் கொண்டு கூட்டுறவுப்பணியை புனிதமாக முன்னெடுப்பதே அன்னாருக்கு நாம் செய்யும் கைமாறு ஆகும்.

யாழ்.மாவட்ட சி.க.கூ.சங்கங்களின் சமாசம்.

# நூல் விரிசை

நூல் : மலையகத் தொழிற்சங்க வரலாறு.
ஆசிரியர் : அந்தனி ஜீவா
வெளியீடு : மலையக வெளியீட்டகம், கண்டி.




மலையக தொழிற்சங்க வரலாறு என்ற பெயரில் மலையக எழுத்தாளர் அந்தனி ஜீவா அவர்களால் எழுதித்தொகுக்கப்பட்ட நூல் வெளிவந்துள்ளது.

மலையக தோட்டத் தொழிலாளர்களாகிய தமிழ் மக்களின் ஒன்றரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட சமூக, கலாசார, அரசியல் வாழ்வில் தொழிற்சங்கங்களுக்கு பாரிய பங்கு இருந்துவந்துள்ளது.

பெரிய கங்காணி, கணக்குப் பிள்ளைமாரின் காட்டுமிராண்டித்தனத்திலிருந்து விடுபட முடியாமல் தவித்துக்கொண்டிருந்த இம் மக்களின் வாழ்வில் தொழிற்சங்கங்களின் பிரவேசம் ஓரளவுக்கு உதவியது என்றாலும் வேறுவகையில் அதுவே அவர்களின் முன்னேற்றத்துக்கும், அரசியல் விழிப்புக்கும் தடையாக இருந்து விட்டதாகவும் குறைகூறுவோர் உண்டு.

மலையகத்தில் எத்தனை தொழிற்சங்கங்கள் இதுவரை செயற்பட்டிருக்கின்றன என்பது பட்டியல் இட்டாலே அது ஒரு புத்தகமாகிவிடும். தொழிலாளர் அல்லாதவர்களே தொழிலாளருக்குத் தலைமை வகிக்கும் விசித்திரமும் அங்குதான் காணப்படுகின்றது.

அந்தனி ஜீவாவின் நூல் இவைபற்றி ஆழமாகவோ விரிவாகவோ ஆராய முற்படவில்லை. அவரே கூறுகிறார். ''மலையக தொழிற்சங்க வரலாறை விரிவாக எழுதப் போகும் ஆய்வாளர்களுக்கு இந்நூல் பெரிதும் உதவும்'' என்று.

உண்மைதான் மலையக தொழிற்சங்கங்களின் வரலாறு விரிவாக எழுதப்பட வேண்டிய ஒன்று. பக்கசார்பற்ற முறையில் இதனை அர்ப்பணிப்போடு செய்ய முற்படும் வரலாற்றாசிரியர்களுக்கு இந்நூல் பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

- சி.பெ.




நூல் : கலைமுகம்
ஆசிரியர் :நீ.மரியசேவியர் அடிகள்
இதழ் : ஏப்ரல் - ஜூன் 2005

கலைஞர்கள், வேற்றுமைகள், பாகுபாடுகள் காட்டாது ஒவ்வொருவரும் தங்களது ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிக்கொண்டுவரவும் வழிவகுத்துக் கொடுத்துள்ளது கலைமுகம் மாத இதழ்.

இந்த இதழின் ஆரம்பத்தில் ஆசிரியர் நீ.மரியசேவியர் அடிகள் திருமறைக்கலா மன்றத்தின் 40 ஆண்டுப் பயணத்தில் ஏற்பட்ட இன்னல்கள், போராட்டங்கள் தொடர்பாகவும் இந்த அமைப்பு தற்போது நாடளாவிய ரீதியில் பரந்து தனது செயற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது எனவும், பல்வேறு விடயங்களைக் கூறி எந்த செயற்பாட்டைத் தொடங்கினாலும் அதை இடைநிறுத்தாமல் முன்னெடுத்துச் செல்வது திருமறைக்கலாமன்றத்தின் இயல்பு. இதன் ஒரு எடுத்துக்காட்டாகத்தான் கலை இலக்கிய சஞ்சிகையான 'கலைமுகம்' விளங்குகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

அடுத்து கலைவிடு அமைதித்தூது என்ற தலைப்பில் சா.பி.கிருபானந்தனது ஆக்கமும் உருமாறல், சிறகிழந்தவன், கோழிக்குஞ்சின் மரணம் போன்ற சிறுகதைகளும் நீ-நான்-நாம், பாம்புகள் உட்புகும் கனவு, காகிதக்கனி, இதயம் பறிபட்ட வலி, எனது வெளியும் வியாபித்தலும் போன்ற இன்னும் பல கவிதைகளும் உள்ளன.

அத்துடன், திருமறைக் கலாமன்றத்தின் 'கடல்கடந்த பயணங்கள்' என்ற தலைப்பில் ஐரோப்பிய கலைப்பயணங்களும் அவற்றுக்கான பின்னணிகளும், வடலிக் கூத்தான் ஐரோப்பியப் பயணம், பயணத்தின் சூழலும் ஏற்பாடுகளும், கலைத்தயாரிப்புகள் போன்ற பல்வேறு விடயங்கள் உள்ளன.

செம்பியன் செல்வன், நந்தி, வி.கே.இரத்தினம், பி.ஸ்ரனிஸ்லாஸ் போன்ற எழுத்தாளர்களின் வரலாறு, புயலின் நிறங்கள் ஓவியங்கள் காட்சி விமர்சனம், கடல் வரைந்த ஓவியம் ஓவியக் கண்காட்சி விமர்சனம் உட்படப் பல்வேறு விடயங்கள் இந்த இதழின் உள்ளே புதைந்துள்ளமை மேலும் கலைமுகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது.

- கங்கா

நூல் : புலரி
ஆசிரியர் : குகபரன்
வெளியீடு : புலரி, சித்தங்கேணி




எமது எதிர்கால சமுதாயம் அமைதியான சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க எமது செயற்பாடுகள் சமூக வளர்ச்சி கருதியதாக விரியவேண்டும். கலை இலக்கிய முயற்சிகளுக்கு ஆதரவு பெருகவேண்டும். வாழ்க்கையை அர்த்தமாக்கும் ஒருமித்த தேடல்கள் நாளைய 'புலர்விற்கு' வழிதிறக்கும். இதுவே புலரியின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சமாகும்.

'புலரியின் 4 ஆவது இதழ் வெளிவந்துள்ள நிலையில் குறுகிய காலவளர்ச்சியில் பல நூற்றுக்கணக்கான வாசகர்களைப் 'புலரி' தன் வசம் ஈர்த்துள்ளதென்பது இங்கு பாராட்டத்தக்கது.

இம்முறை வெளிவந்துள்ள 'புலரியில்' சமகால யாழ்ப்பாணம் எனும் தலைப்பில் கலாநிதி ம.இரகுநாதன் எழுதியுள்ள கட்டுரை ஈழத்தமிழரின் வாழ்வியல் அதன் தற்போதைய மாற்றங்கள் என்பவற்றைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவின் இயக்குநர் ஈழத்தின் சிறந்த பட்டிமன்ற நடுவருமாகிய அ.குமாரவேலுடனான நேர்காணல், தொல்புரம் சி.கதிர்காமநாதன் எழுதிய 'சோதனை' எனும் சிறுகதை என்பவற்றுடன் -

ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் தடம்பதித்து அண்மையில் விண்ணுலகம் சென்றுவிட்ட காரை சுந்தரம்பிள்ளை, வாழ்நாள் மருத்துவப் பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி), பேராசான் சிவராமலிங்கம், சிலோன் விஜேயேந்திரன் ஆகியோரது அஞ்சலிக் குறிப்புகளும் இடம்பிடித்துள்ளன.

தமிழர் பழம் பெருநகர் திருகோணமலையில் உள்ள இராவணன் கல்வெட்டுப் பற்றிய பார்வை விரித்துள்ளது. இவற்றுடன் கவிதைகள், கட்டுரைகள், சீரும் சிரிப்பும் எனப் பல்வேறு அம்சங்களை தங்கி புலரி வெளிவந்திருக்கிறது.

நேரிய சிந்தனை, சமூகப்பொறுப்பு என்பவற்றை அடித்தளமாக வைத்து சித்தன் கேணி கலை இலக்கிய வட்டத்தின் வெளியீடான புலரி எதிர்காலத்தில் பல ஆயிரக் கணக்கான வாசகர்களின் நெஞ்சங்களைத் தொடும் என்பதில் ஐயமில்லை.

- கவிதரன்

## Jaffna College Institute of Technology Vaddukoddai.

வடக்கு - கிழக்கு மாகாணத் தலைமைச் செயலாளரின் நிதியுதவியுடன். யாழ் அரச அதிபரின் மேற்பார்வையின் கீழ் எமது தொழில்நுட்ப நிறுவனத்தில் பின்வரும் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

**மோட்டார்சைக்கிள் தொழில்நுட்பம்**
(Motorcycle Mechanic) **காலம் 6 மாதம்**

விண்ணப்பதாரிகள் 12/12/2005இற்கு முன் விண்ணப்பிக்கவும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நேர்முகத்தேர்வு மூலம் இப்பயிற்சி நெறிக்கான மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். பயிலும் மாணர்களுக்கு உதவிப்பணம் வழங்கப்படும். பயிற்சிநெறிக்கான விண்ணப்பப்ப டிவங்களை எமது நிறுவ னத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
இப்பயிற்சி நெறி ஜனவரி (January2006)இல் ஆரம்பிக்கப்படவுள்ளது.
*மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai. T.P:060-2213139** (C-46465)


## வலி.மேற்குப் பிரிவில் கலைஞர் விவரம் திரட்டல்

வலி. மேற்கு. டிசெ.3

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தினரால் கலைஞர்களின் விவபரங்கள் திரட்டப்படுகின்றன. தற்போது இப்பிரிவில் வசிக்கின்ற. வெளிநாடுகளில் வசிக்கின்ற.இறந்த கலைஞர்களின் விவரங்கள் இவ்வாறு திரட்டப்படுகின்றன. தற்போது வசிக்கின்ற கலைஞர்களுடன் . இறந்த.வெளிநாடுகளில் வசிக்கின்ற கலைஞர்கள் சார்பாக அவர்களது நெருங்கிய உறவினர்கள் விண்ணப் பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கலாம் என்று கலாசார உத்தி யோகத்தர் செல்வி க.ரஜனி தெரிவித்தார்.

(த-175)

## நவாலிப்பகுதியிலுள்ள வயல்களில் கால்நடைகளால் பயிர்கள் நாசம்

நவாலி. டிசெ. 3

நவாலி வயல்களிலுள்ள நெற்பயிர்களை ஆடு. மாடுகள் அழித்து வருவதாக நாவலி விவசாய சம்மேளனத்திற்கு பல முறைப்பாடுகள்கிடைத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதிகளில் பெரும் போக நெற் செய்கை மேற்கொள்ளப்படாத வெற்றுக் காணிகளில் கால் நடைச் சொந்தக்காரர்கள் தமது கால்நடைகளை நீண்ட கயிற்றில் கட்டை இறுக்கி அதில் கட்டி விட்டுச் செல்கின்றனர். நிலத்தில் இறுக்கப்படும் கட்டைகள் கழன்று விடுவதால் கால்நடைகள் தம்இஷ்டப்படி வயல்களுக்குள் புகுந்து நெற்பயிர்களை அழித்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பல ஆயிரம் ரூபா செலவழித்து நெற் செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டு வருவதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டது. (த-100)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து




லண்டனில் வசிக்கும் தவப்புதல்வன் பிரியலோஜினி தம்பதியரின் செல்வப் புதல்வி லதுஷா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று(03.12.2005) சனிக்கிழமை லண்டனில் மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார். லதுஷா குட்டியை அன்பு அப்பா, அம்மா, வவுனியாவிலுள்ள அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அன்ரா யாழ்ப்பாணத்திலுள்ள பெரியப்பா, லண்டனிலுள்ள மாமா, அத்தைமார், வவுனியாவிலுள்ள அக்காமார் கேசிகா,மிர்த்தனா யாழ்ப்பாணத்திலுள்ள பூட்டன் வுனியாவிலுள்ள பூட்டிமார், உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் வேலணை முத்து மாரி அம்மன் அருள் பெற்று சகல ஐஸ்வரி யங்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: K.சந்திரன்
தாத்தா – வுனியா T.P.:024-2223945

## ஒளி விழா நிகழ்வுகள்

நவாலி டிசெ.3

நவாலி மகாவித்தியாலயம் நடத்தும் ஒளி விழா எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு வித்தியாலய உப அதிபர் ச.ஜெயாநந்தன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறும்

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஆனைக் கோட்டை பங்குத் தந்தை அருட் திரு .நேசராசா அடிகளார் கலந்துகொள்வார்.

(த-100)

* * *

நவாலி சென் பீற்றஸ் றோ.க.த.க பாடசா லையினர் நடத்தும் ஒளி விழா எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணி முதல் அதிபர் யோ.எ. பங்கிராஜ் தலைமையில் பாடசாலை மண்ட பத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக நவாலி பங்குத்தந்தை அருட் திரு. நேசராசா அடிகளார் நவாலி தென்னிந்திய திருச்சபை வணபிதா தேவ குணானந்தன் அடிகளார் அணைக்கோட்டை றே.க.த.க.பாடசாலை அதிபர் சிறில் சுகந்தன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (த-100)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து






திரு. திருமதி நந்தகுமார் - நாமகள் தம்பதியரின்
செல்வப்புதல்வி **தமன்யா**
தனது முதலாவது பிறந்த நாளை இன்று (03.12.2005) சனிக்கிழமை புலோலியில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். செல்வி தமன்யாவை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, லண்டன் மாமா, சித்திமார், சித்தப்பாமார், மாமிமார், மாமாமார், பெரியப்பாமார், அக்காமார், அண்ணாமார், தாத்தா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வீரபத்திரர் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

**புலோலி தெற்கு,**
**புலோலி.**

**அப்பா,அம்மா,**
**அம்மம்மா.**

## அசெம்பிளி ஒவ் கோட்- சுன்னாகம் 20 ஆவது ஆண்டு விழாவின் நன்றி கூறும் ஆராதனை (1985-2005)

திகதி : 04-12-2005 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : 9 மணி காலை (புதிய நேரம்)
தேவசெய்தி :வண. போதகர் வோப்ஸ் மொறிசன்
(அசெம்பிளி ஒவ் கோட், ஆஸ்திரேலியா)

தலைமைப் போதகர்கள்.
உடன் போதகர்கள்.
சபையார்.

**உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர்,**
**அவர் அப்படியே செய்வார்**
**(1தெச.5:24)**

(11-19) (43397)

## ASSEMBLY OF GOD - CHUNNAKAM CELEBRATES 20th ANNIVERSARY THANKSGIVING SERVICE (1985-2005)

Date:04.12.2005
Time:9.00 a.m. (SLT)
Homily: **Rev.Forbes Morrison**
(AOG AUSTRALIA)

Senior Ministers
Associates & Congregation

"He who calls you is faithful, who also will do it"
1 Thess 5:24

(43398)

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு
09 - 05 - 1939

இறப்பு
03 - 12 - 2004

தியடோர்
கிறகோரி நவரட்ணம்

தகவல்: ரு.சாந்தி [மகள்]
இல 3, பாரதி வீதி, கச்சேரி

உங்கள் நினைவுடன் வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## மீன்பிடிவலைகளை வீதிகளில் உலரவிடுவதால் அசௌகரியம்

அரியாலை டிசெ.3

மீனவர்கள் தமது மீன்பிடி வலைகளை வீதிகளில் போட்டு வெய்யிலில் காய விடுவதால் வீதியால் பயணிக்கும் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளா கின்றனர்.

கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் இவ்வாறு வலைகள் காயவிடப் பட்டிருக்கின்றன. இதனால் வீதியால் பயணிக்கும் மக்கள் சிரமப்படுவதோடு வலையில் சிக்குண்டு விபத்துக்கு இலக்காகி வருகின் றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வலையில் சிக்கி விழுந்து இதே இடத்தைச் சேர்ந்த திருமதி இராமநாதன் பூரணம் என்பவர் காய மடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரவு வேளையில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞர் ஒருவர் வலையில் சறுக்கி மோட்டார் சைக்கிளுடன் தூக்கி எறியப்பட்டு காயம டைந்தார் என்றும் கூறப்பட்டது.

இவ்வாறு மக்கள் பயணிக்கும் இந்த வீதியில் மீன் பிடி வலைகளை போட்டு காய விடுவதை தடுக்குமாறு இப்பகுதி மக்கள் யாழ். மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-17)


**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

கொழும்பில் இயங்கிவரும் தனியார் நிறுவனத்திற்கு யாழ்ப்பாணத்திற்கும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிற்கும் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. முன் அனுபவம் விரும்பத் தக்கது. சகல தகமைச் சான்றிதழ்களின் பிரிகளுடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி.
MANAGER,POWER GREEN, 49,St.LAWRENCE ROAD, WELLAWATTE, COLOMBO 06 (C46455)


## ஓராண்டு இதய அஞ்சலி



தோற்றம்
15 06 1923

மறைவு
13 12 2004

அமரர்
செ, சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி:துதியை

நாள் வாழ்ந்த காலம் போதும் என்று
நீர் ஐங்கரனின் பாதத்தில் நிம்மதியானீர்
நாம் விழிநீர் நிறைய வழி தெரியாமல்
நிற்கிறோம் உம் நினைவில்

(43375)

சித்திவிநாயகர் வீதி,
நாவற்குழி மேற்கு, கைதடி

குடும்பத்தினர்.

## 12 ஆம் ஆண்டு நன்றி நினைவஞ்சலி

(3-12-1993 - 3-12-2005)



LOURDES RAYMOND MUTHAIAH
லூர்து ரேமண்ட் முத்தையா

"உம்மை எமக்கு ஈந்தளித்த இறைவன்
தம்முடன் என்றும் உம்மை வாழவைப்பார்"
நித்திய இளைப்பாற்றியை
இவருக்கு அளித்தருளும்

உமது நினைவில் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
67/1, ரெம்பிள் றோட், யாழ்ப்பாணம்.

# வலுவிழந்தோரின் வாழ்வை வளமாக்குவோம்!

***ஐக்கிய நாடுகளின் ஒன்றியத்தின் புள்ளிவிவரப்படி 20 பேரில் ஒருவர் வலுவிழந்தவராகக் காணப்படுகின்றார். இதில் 80% மிகக் குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் வசிக்கின்றார்கள். இவர்களில் பெரும்பாலானோர் அடிப்படைச் சேவைகளும் ஆரோக்கியமான சூழலும் மிகக் குறைவாகவுள்ள பகுதியிலேயே வசிக்கின்றார்கள். அவர்கள் தமது அன்றாடத் தேவைகளுக்கும் வாழ்க்கைக்கும் போராட வேண்டியுள்ளது.***

வலுவிழந்தவர்களை பலவீனமானவர்களாக, சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாக பார்க்கின்ற பார்வை பரவலாகக் காணப்படுகின்றது. இவர்கள் இயல்பாகவே மிகவும் ஏழ்மையையானவர்களாகவும் குறைந்த கல்வியறிவுடையவர்களாகவும் வேலை வாய்ப்பற்றவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

இவையே இவர்களைப் பாகுபடுத்திப் பார்க்கும் நிலைக்கு இட்டுச் செல்கின்றது. இவ்வாறான இவர்களின் நிலைக்கு சமூகத்தின் தவறும் ஒரு காரணம் என்பதனை நினைவு கொள்ளவேண்டும்.

எம் சமூகத்தில் உள்ள வலுவிழந்தோர் தம் சுயதெரிவாய் ஊனத்துடன் இவ்வுலகில் பிறப்பதில்லை. சில சமயங்களில் வாழும் காலங்களில் ஏற்படும் ஊனத்தினைக் கூட இவர்கள் தெரிவுசெய்யவில்லை. இவர்களும் சாதாரண மக்கள் போன்றவர்கள் தான். இவர்களுக்கும் எல்லோருக்கும் உள்ள உரிமையில் சமபங்குண்டு.

எம் சமூகத்தில் பெரும்பாலானோர் வலுவிழந்தோர்களைக் காணும்போது அவர்களின் வெளித்தோற்றத்தைக் கண்டு அனுதாபம் கொள்கின்றார்கள். சிலர் அவர்களைத் தவிர்த்துக் கொள்கின்றார்கள். மங்களகரமான நிகழ்விற்குச் செல்லும் போது சகுனத்திற்கு இவர்கள் உகந்தவர்கள் அல்லர் என எண்ணுகின்றார்கள் சிலர். இன்னும் சிலபேர் தாம் போகும் பாதையில் இவ்வாறானவர்களைக் கண்டால் தாம் நினைத்துச் செல்லும் காரியத்தில் தடங்கல் ஏற்படும் என நம்புகின்றார்கள். இவ்வாறு நினைக்கக் காரணம் அவர்களின் மனநிலையாகும். யார் ஒருவர் இவ்வாறு எண்ணுகின்றானோ அவனது செயற்பாடுகள் என்றுமே வெற்றியடையாது. இவ்வாறு நினைத்தல் "பூனை குறுக்கால் சென் றால் சகுனம் சரியில்லை" என நினைக்கும் மூடநம்பிக்கைக்கு ஒப்பானது.

### வலுவிழந்தோரிடம் திறமைகள் அதிகம்!

சாதாரண மனிதனிடம் இல்லாத திறன்கள் வலுவிழந்தவர்களிடம் உண்டு. நாங்கள் அவர்களிடம் காணப்படுகின்ற சிறப்பான அதிவிஷேடமான திறன்களைப் பார்ப்பதில்லை. அவர்களின் அங்கவீனத்தையே பார்க்கின்றோம். முற்றாகப் பார்வையற்ற ஒரு நபர் திறமைமிக்க ஒரு அமைச்சராகப் பிரித்தானிய அரசாங்கத்தில் இருந்துள்ளார் என்பது இதற்கு எடுத்துக்காட்டு. எமது நாட்டிலும் வலுவிழந்தோர் பலர் மிகத்திறமை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். ஒவ்வொரு நாளும் இவ்வாறானவர்களை எமது தெருக்களில் நாம் காண்கின்ற போதும் அவர்களின் சிறப்புத் திறன்களை அடையாளம் கண்டுகொள்வதில்லை. அவர்களுக்குள்ளே இருக்கின்ற உன்னதமான திறமைகள் வெளிப்படையாய்த் தெரியும் அவர்களது அங்கவீனத்தில் மறைந்துவிடுகின்றது. அவர்களைத் திறமைமிக்கவர்களாக வெளிக்கொணர எம்மால் இயன்றளவு முயற்சிக்க வேண்டும். எமதுநாட்டின் நலனிற்கும் முன்னேற்றத்திற்கும் அவர்களது திறமைகளையும் பயன்படுத்திக் கொள்வது அவசியமானதாகும்.

வேலை நியமனத்தின் போது 3% இட ஒதுக்கீடு ஊனமுற்றோருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற சட்டம் நடைமுறையில் இருந்தாலும் வேலைத்தளங்களில் இவர்களால் திறமையாய்ச் செய்யக்கூடிய வேலைகள் உள்ள வேலைத்தளங்களில் கூட வலுவிழந்தோர் அமர்த்தப்படுகின்றார்களா? என்பது கேள்வியாகவே உள்ளது.

**இன்று சர்வதேசவலுவிழந்தோர் தினம்**

### ஆரம்பத்தில் திருத்த வேண்டும்

பெரும்பாலான அங்கவீனர்களைச் சிறுவர்களாக இருக்கும் போதே திருத்திக் கொள்ள எத்தணிக்க வேண்டும். இல்லையெனில் அவர்களின் பிற்கால வாழ்க்கையில் அதனைச் சரிசெய்து கொள்வது அல்லது நிவர்த்தி செய்துகொள்வது என்பது மிகக் கடினமான காரியமாக இருக்கும். உதாரணமாக ஒரு குழந்தைக்கு கேட்கும் ஆற்றல் குறைவாகவோ அல்லது பேசும் திறன் குறைவாகவோ இருப்பின் அதனை ஆரம்ப காலத்தில் சரிசெய்யும் பட்சத்தில் அந்தக் குழந்தை வழமைபோன்றதொரு அல்லது அதற்கு அண்மித்ததான ஓர் எதிர்கால வாழ்க்கையைப் பெறமுடியும். ஆரம்ப காலத்திலேயே இதனை அலட்சியம் செய்யாது சரிசெய்தல் மூலம் குழந்தை காதுகள் கேட்கும்திறன் அற்றதாவதைத்தடுக்க முடியும். ஆரம்பத்தில் அடை யாளம் கண்டு சரிசெய்து கொள்ளாது விடுதல் என்பது பெற்றோர், உறவினர்கள், அயலவர்கள், ஆசிரியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் சில பிரச்சினைகளுக்காக குழந்தைகளைப் பார்வையிடுவோரின் தவறேயாகும். பின்பு இவர்கள் ஊனத்துடன் சமூகத்தில் உலாவும்போது சமூகத்தில் இருந்து விலக்கப்பட்டவர்களாக அவமானத்துக்குள்ளாகுபவர்களாக, சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களாகக் கருதப்படலாம்.

### உதவுவது சகலரதும் கடமை

இவ்வாறான சமூகத்தின் பார்வை சமூகத்தில் உள்ள நோயே தவிர வலுவிழந்தோரில் உள்ளது அல்ல. வலுவிழந்தோருக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளைக் கூட சமூகம் கொடுக்க மறுக்கின்றது. சமூகம் இவர்களது உரிமைகளை உணர்ந்தால் மட்டும் போதாது. இவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இடையூறாகக் காணப்படும் சமூக, பௌதிகத் தடைகளை அகற்றி வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உதவவேண்டும்.

வலுவிழந்தவர்களின் முன்னேற்றத்திற்கு தனியே கல்வியறிவு பெறுவதற்கும் அத்தியாவசிய சேவைகளைப் பெறுவதற்கும் உரிய நடவடிக்கை எடுப்பது மட்டுல்ல வலுவிழந்தோர் பயன்படுத்தவென பிரத்தியேக நடைபாதை அமைத்தல், அவர்களுக்குப் பொருத்தமான வாகனங்களுக்கான ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் வழங்குதல் மூலம் அவர்களின் வளர்ச்சிக்கு உதவலாம்.

இவைமட்டுமல்ல, வலுவிழந்தோர் கல்வி கற்கும் பாடசாலைச் சமூகம் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்கள் இவர்களில் விசேட கவனம் செலுத்தியும் கூடிய சலுகைகள் கொடுத்தும் இவர்களை முன்னேற்ற வேண்டும். ஊனம் காரணமாக பாடசாலை செல்லமறுக்கும் அல்லது இடையில் கல்விச் செயற்பாட்டில் இருந்து விடுபட்ட சிறுவர்களிடம் கூடிய முயற்சி எடுத்து அவர்களைச் சீர்படுத்த வேண்டும்.

வலுவிழந்தோர் தமக்குரிய சேவைகளைப் பெறுவதில் முன்னுரிமை உடையவர்கள் (உ-ம்: வைத்தியசாலைகள், அரச அலுவலகங்கள்...). ஆனால், இந்த நாட்டில் எத்தனை வைத்தியசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களில் இலகுவாகச் செல்லும் வசதி அல்லது முன்னுரிமை காணப்படுகின்றது? சில சிகிச்சை நிலையங்கள் இவர்களுக்காக கீழ்த் தளத்தில் அமைந்தனவாகக் காணப்பட்டாலும் பெரும்பாலாக இவர்களுக்கான சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது.

பார்வைத்திறன் இல்லாத பல மாணவர்கள் எமது பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கின்றார்கள். இன்றைய உலகம் தகவல் தொழில் நுட்பத்தில் பாரிய அளவு முன்னேறினாலும் எத்தனை பல்கலைக்கழகங்கள் இவ்வாறான மாணவர்களின் கற்றலுக்கு உரிய உதவி வழங்குகின்றன? பரீட்சையின் போது மட்டும் உபயோகிப்பதற்காக "Braille Typewriters" ஐ சில பல்கலைக்கழகங்கள் கொண்டுள்ளன. இவ்வாறான தட்டச்சுக்கள் மற்றைய நேரங்களில் பயன்படுத்தப்படுவதில்லை எனலாம்.

வளர்ந்த, வளர்கின்ற நாடுகள் சிலவற்றில் வலுவிழந்தோர்களுக்கான சில நிறுவனங்கள் இவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளன. எமது நாட்டிலும் இவ்வாறான நிறுவனங்கள் உண்டு. மிகக் குறைந்த எண்ணிக்கையுடைய இவ்வாறான நிறுவனங்கள் நகரப் பகுதியிலேயே நிலை கொண்டுள்ளன. அத்துடன், இவற்றிற்கு சமூ கத்தில் மாற்றத்தைக் கொண்ட வரக்கூடிய போதியளவு செல்வாக்கு இல்லை.

பத்திரிகையாளர்கள் வலுவிழந்தோர்களினது நலனைக் கருத்தில் கொண்டு இவ்வாறானோரை நேர்காணல் செய்வதன் மூலம் இவர்களது பிரச்சினைகளையும் அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வுகளையும் வெளிச்சத்துக் கொண்டுவரலாம். நேர்காணலின்போது நகரப்பகுதியைச் சார்ந்தவர்களை மட்டுமன்றி ஒதுக்கப்பட்ட கிராமங்களில் உள்ளவர்களையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இது சமூகத்தின் மேம்பாட்டிற்கு உதவக்கூடிய ஒரு சிறந்த முயற்சியாகும். வலுவிழந்தோர்களினது பிரச்சினைகளை வகைப்படுத்துவதும் இல்லாமல் செய்வதும் மிகவும் கடினமான காரியம். இதில் முக்கியமானது என்னவெனில், பார்த்துப் பரிதாபப்பட்டு சில ரூபாய்களைக் கொடுத்து அவர்களைத் தங்கி வாழச்செய்வதனைவிட இவர்களின் வாழ்க்கையை உயர்த்த அர்ப்பணிப்புடன் முயச்சிப்பதே சிறந்தது.

இவர்களுக்கு அனுதாபம் தேவையில்லை.

இவர்கள் தமது சொந்தக் கால்களில் நிற்க விரும்புகின்றார்கள்.

இவ்வாறான நிலையை ஏற்படுத்துவது சமூகத்தின் கடமையாகும். ✸

வைத்திய கலாநிதி ந.சிவராஜா
ஆலோசகர், உலக சுகாதார நிறுவனம்.

---

# குடாநாட்டு விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் தூவல் நீர்ப்பாசன உபகரணங்கள் வழங்க ஏற்பாடு

வலி.கிழக்கு,டிசெ.3

யாழ்.மாவட்டத்தில் உள்ள விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு ஐ.நா.அபிவிருத்தி நிறுவனம் விவசாயத் திணைக்களத்தின் ஊடாக 94 தூவல் நீர்ப்பாசனப் பொறிகளை மானிய அடிப்படையில் வழங்கவுள்ளது.

முதற்கட்டமாக 89 விவசாயிகளுக்கு ஏற்கனவே இந்த தூவல் நீர்ப்பாசன பொறிகள் வழங்கப்பட்டன தற்போது அதன் பயன்பாடு வெற்றியளித்திருப்ப தையடுத்து இதனைப் பெற மேலும் 186 விவசாயிகள் விண்ணப்பித்தனர் என்றும் இதில் 94 பேருக்குத் தற்போது இவை வழங்கப்படவுள்ளன என்றும் விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.சுந்தரேசன் கூறினார்.

ஐம்பது வீத மானிய அடிப்படையில் இந்த உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

சுழற்சி முறைக் கடன் அடிப்படையில் மேலும் பல விவசாயிகளுக்கு இதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உடுவில் 10, தொல்புரம் 4, புத்தூர் 10, உரும்பிராய் 10, நல்லூர் 2, கீரிமலை12, சாவகச்சேரி 8, கைதடி 5, வேலணை 10, அம்பன் 12, புலோலி 10, யாழ்.மாவட்ட விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் 1 என்ற




அடிப்படையில் தற்போது பொறிகள் வழங்கப்படவுள்ளன.

வெங்காயம், மரக்கறி, முந்திரிகை போன்ற பயிர்களுக்கே இந்த தூவல் நீர்ப்பாசனப் பொறிகள் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நீர்த்தட்டுப்பாடு காரணமாக புதிய தொழில்நுட்பத்துடனான நீர்ப்பாசன முறையை அமுல் செய்யவும், விவசாயிகளின் உற்பத்தியைப் பெருக்கவும் இந்த முறை உகந்தது என்றும் - கூறப்பட்டது.

(த-180)

## வலுவிழந்தோர் தின நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ்.மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்விற்கான நிறுவனங்கள் நடத்தும் சர்வதேச வலுவிழந்தோர் தினவிழா இன்று சனிக்கிழமை ஜெய்ப்பூர் நிறுவன அலுவலகத்தில் காலை 9.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்ளவுள்ளார்.

(த-14-86)

# யாழ்.மாவட்டத்தில் இந்தவருடம் 42 குளங்கள் புனரமைக்கப்பட்டன

வலி.கிழக்கு.டிசெ.3

யாழ்.மாவட்டத்தில் இவ் ஆண்டு யாழ். மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தினால் 42 குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட 31 லட்ச ரூபா நிதியில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் கச்சாய் கிலிவாய்க் கால், கண்டுவில்குளம், விளைவேலி வாய்கால், வடமராட்சி வட்டத்தாழ்வுக்குளம், வெல்லக்குளம் - வாய்க்காலும், மூளாய் பண்ணாகம் - நெடுங்குளம், சரவணை - கரப்பன்குளம் ஆகிய குளங்கள் புனரமைக்கப்பட்டன.

கமநலசேவைத் திணைக்களத்தின் 10 ஆயிரம் குளத்திட்டத்தின் கீழ் தென்மராட்சியில் 5 குளங்கள் தீவகத்தில் - 2 குளங்களும், கீரிமலை, கோப்பாய் - வடமராட்சி காரைநகர் ஆகிய இடங்களில் தலா மூன்று குளங்களும் புனரமைக்கப் பட்டன.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் தென்மராட்சியல் 7 குளங்களும் வடமராட்சியில் 4 குளங்களும் சண்டிலிப்பாய், கோப்பாயில் தலா ஒரு குளமும் வேலணையில் 2 குளங்களும் திருத்தப்பட்டுள்ளன. (த-180)

# வெள்ளம் புகுந்த குடிசைகளிலேயே தொடர்ந்தும் வாழும் அவலநிலை!

## கைதடி - ஊரியான் பிரதேச மக்கள் அவதி

கைதடி,டிசெ.3

அண்மையில் பெய்த கடும் மழையினால் கைதடி ஊரியான் பிரதேச மக்களும் பெரும் பாதிப்பை அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் வாழும் வறிய மக்கள் பலரின் குடிசைகளில் மழைவெள்ளம் உட்புகுந்ததால் குடிசைகளின் சுவர்கள் வீழ்ந்துள்ளன.

இதனால், மக்கள் இருப்பிட வசதியின்றி அல்லலுறுகின்றனர். தற்போதும் மழைவெள்ளம் புகுந்த குடிசைகளிலேயே தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

இது சம்பந்தமாக உதவிகோரி அரச அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரை எதுவித உதவிகளும் தமக்குக் கிடைக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். விரைவில் தமக்கு வெள்ள நிவாரண உதவி கிடைக்க வழிவகை செய்யுமாறு சம்பந்தப்பட்டோரிடம் இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(த-75)

# ஜி.சீ.ஈ. சாதாரண மாணவர்களுக்கு இன்றும் நாளையும் கருத்தரங்கு

கைதடி,டிசெ.3

ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் இவ் வருடம் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி கைதடி மத்தி வளர்மதி கல்விக்கழகம் முன்னோடி வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றை இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக் கிழமையும் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளது.

முன்னோடி ஆசிரியர்களினால் நடத்தப்பட இருக்கும் இவ் வழிகாட்டல் கருத்தரங்கில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விஞ்ஞானமும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரைக்கும் கணிதம் மற்றும் தமிழ் ஆகிய பாடங்களும் இடம்பெற இருக்கின்றன.

அத்துடன், அச்சடிக்கப்பட்ட இலவச பாடக்குறிப்புகளும் பங்குபற்றும் மாணவர்களுக்கு வழங்கப்பட இருக்கின்றன.

எனவே, இம்முன்னோடி வழிகாட்டல் கருத்தரங்கில் கலந்து பயன்பெறவிரும்பும் மாணவர்கள் இன்று காலை கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-75)

## SATS-TECH ENGINEER'S

SATS-TECH

5 ஆம் ஆண்டில் கால் பதிக்கும் வேளையில் உங்களுக்காக விசேட விலையில்

**K.U.BAND DISH SYSTEM** (2 Channel Tamil Free) — ரூபா 9000 மட்டும்

**C.BAND** 8 அடி டிஸ் சிஸ்டம் (10 Channel Tamil Free) — ரூபா 17000 மட்டும்

* வியாபாரிகளுக்கும் மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கும் விசேட விலைக்கழிவு உண்டு.
* ஒருவருட உத்தரவாதம்
* இலவச SOFT WARE INSTALATION
* இலவச Channel Updating
* இவ் விலைக்கழிவு டிசெம்பர் 31.2005 வரை மட்டுமே

மற்றும் அனைத்து கேபிள் T.V. உபகரணங்களும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:

**SATS-TECH ENGINEER'S**

இணை அனுசரணை:

SPACE TECH INDIA Pvt, Ltd
M/S NATIONAL VIDEO CENTER
182, K.K.S. வீதி,
(குளப்பிட்டி சந்தியருகில்)
கொக்குவில், யாழ்ப்பாணம். (43382)(42.32.11.19)

Phone: 021 222 5908. Hot line: 0777710785

(43382)(21.45.46)



காங்கேசன் சிமெந்துப் பொதுத் தொழிலாளர் யூனியன்

## விசேட பொதுக்கூட்டம்

காலம்: 04.12.2005
நேரம்: முற்பகல் 9.30 மணி
இடம்: யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபம்

மேற்படி யூனியனின் ஆயுட்காலம்/ நிதி/ சொத்துகள் போன்றவற்றின் இறுதி முடிவு எடுக்கப்படும்.

யூனியன் நன்கொடைப்பணம் இதுவரை பெற்றுக் கொள்ளாத அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்

தலைவர்/செயலாளர்,
காங்கேசன் சிமெந்துப் பொதுத் தொழிலாளர் யூனியன்

(43169)(21.45.46)



World Vision

**சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகள் அமைத்தலுக்கான ஒப்பந்தகாரர்களுடனான சந்திப்பு**

வேள்ட் விஷன் நிறுவனமானது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் 500 தொடக்கம் 580 சதுர அடி பரப்பளவைக் கொண்ட புதிய வீடுகளை நிர்மாணிக்க இருக்கின்றது.

ஆகவே மேற்குறிப்பிட்ட வீடுகளை அமைப்பதற்கான ஒப்பந்தகாரர்கள், கட்டடத் தொழிலாளர்கள், தச்சுத் தொழிலாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடுவதற்காகத் தாங்கள் எதிர்வரும் மார்கழி மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கீழ்குறிப்பிடப்படும் முகவரியில் சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**வேள்ட் விஷன் லங்கா**
நெடுங்கேணி வீதி,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.

முக்கிய குறிப்பு: ஒப்பந்தகாரர்கள் சுயவிவரக் கோவையையும் தேசிய அடையாள அட்டையினையும் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். [சி/46467]


## சாதாரண தர மாணவருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.3

கொக்குவில் நிறைவாழ்வுக் கழகமும் நல்லூர் றோட்டறக்ட் கழகமும் இணைந்து நடத்தும் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் கோண்டாவில் இந்துமகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணி முதல் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் தமிழ், கணிதம், சமூகக் கல்வி, விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படவுள்ளன.

(3-202)


## இறுதிச் சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்

யாழ்.பல்கலைக்கழகத்தில் 06, 07-10-2005 இல் பட்டம் பெற்ற மாணவர்களின் Video, புகைப்படப் பிரதிகள் விநியோகிக்கப்படுகின்றன. உடன்பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும்.

காலம்:- 03.12.2005 - 11.12.2005
நேரம்:- காலை 8 மணி - தொடக்கம்....
இடம்:- Pon Digital Video, லக்ஷிமி நாதம்,
புகைப்படக் கலையகம்
C/O K.கண்ணன்
இல. 90, சட்டநாதர் சிவன் கோயில் வீதி,
(இளங்கலைஞர் மன்ற வீதி)
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 0777238837 மதன், 0776544158 தர்மா

11.12.2005 இன் பின்பு ஆயின், வவுனியா கலையகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
இல.11, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா. T.P. 0244589659.

(43485) (21.45.46)



## உங்களுக்கோர் சேமிப்பு, உங்களுக்கோர் இல்லம்!

CBSL

காணிவாங்குதல், வீடுகட்டுதல், வீடுவாங்குதல், வீடு திருத்தி அமைத்தல் போன்ற தேவைகளுக்கு கடன்பெற சேமிப்புக் கணக்கு ஒன்றை எங்களுடன் ஆரம்பியுங்கள்.

**மேலும், அதியுயர் வட்டியில் நிலையான வைப்புக் கணக்குகள். முதியோர் நிலையான வைப்பிற்கு விசேடசலுகைகள்.**

*பிரதிநிதி ஒருவரின் ஆலோசனைபெற அழையுங்கள். 021 222 6258*

**செலிங்கோ வீடமைப்பு கடன் சங்கம் (லிமிட்டட்),**
*24, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 6258*
(இலங்கையில் தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட தனியார்துறை வீடமைப்புச் சங்கமாகும்). (43482) (18.45.46)



2 ஆவது ............

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

லண்டனில் வசிக்கும் தேவசங்கர் - சோபனா தம்பதியினரின் செல்வப் புதல்வன் சஞ்ஜித் (சஞ்சி) தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (03.12.2005) சனிக்கிழமை தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை லண்டனிலிருக்கும் அப்பா, அம்மா, உரும்பிராயைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், தும்பளையைச் சேர்ந்த அம்மம்மா, ரவி பெரியப்பா, றஞ்சி அன்ரி, துவாரகன், ரிசாந், கீர்த்தன், கிறோஜா, உடுப்பிட்டியைச் சேர்ந்த சுதா மாமா, சூட்டி மாமி, யதுர்சனா மற்றும் பூட்டி, பெரிய அம்மம்மாமார், அம்மப்பாமார், அன்ரா அனைவரும் சந்நிதி முருகப் பெருமான் அருளால் பல்கலைகளும் பெற்று கல்வி, செல்வச் சிறப்புடனும் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
அம்மம்மா T.பவானிதேவி

நீலாவத்தை, தும்பளை, பருத்தித்துறை.



(43469) (24)



# IMMEDIATE VACANCY

**solidar** An INGO consortium including NPA, SAH and ASB

**Position : Translator (1 position)**

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar networkin Sri Lanka comprises of three international NGOs –Arbeiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH).

Under the Village Rehabilitation and Development Physical Infrastructure Program, Solidar will be implementing the construction of more than 1000 permanent houses for Tsunami Affected families in Vadamarachchi East.

We are currently looking for a qualified and dynamic person to fill the position of a translator (Tamil-Englishm, English-Tamil)

The Translator will have to carry out direct verbal and written translation, be familiar with construction technologies and willing to spend most of his/her time in the field.

Interested candidates MUST posses the minimum requirements stated below. Please send in you're applications to reach us on or before Friday, 9 th December 2005.

**Qualifcations:**

- Excellent communication skills
- Previous experience with International NGOs.
- Degree in translation is preferable.
- Computer literate (Microsoft Word and Excel both in Tamil and English)
- Maximum age limlt :40 years.

Interested Persons Can submit their CV to: Solidar Canstruction Office, 160 th mile post, Farm Point, A9 Road, Paranthan

(C46472)

Norwegian People's Aid — ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. — Swiss Labour Assistance SAH

# ஈராக்கில் மின்னல் வேகத் தாக்கு; ரமாடி நகரம் தீவிரவாதிகள் வசம்



ஈராக்கின் ரமாடி நகரை தீவிரவாதிகள் கைபற்றியபின்னர் அங்கு நிலைகொண்டுள்ள அல் -குவைதா உறுப்பினர் ஒருவரைப் படத்தில் காணலாம்.

பாக்தாத்,டிச.3

ஈராக்கின் ரமாடி நகரத்தின் மீது தீவிரவாதிகள் பாரிய தாக்குதலை நடத்தி அதன் முக்கிய பகுதிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர். அமெரிக்கக் கூட்டுப்படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் கடும் சண்டை அங்கு இடம்பெற்று வருகிறது. தீவிரவாதிகளை விரட்டியடிக்கும் நடவடிக்கைகளில் அமெரிக்கக் கூட்டுப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கடும் சண்டையில் ஏற்பட்ட உயிரிழப்புகள் பற்றிய விவரங்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

மத்திய ஈராக்கின் முக்கிய நகரான ரமாடியில் அமைந்துள்ள அமெரிக்கப் படையினரின் முக்கிய தளம் உட்பட பல இராணுவ நிலைகள் மீது அல் - குவைதா அமைப்பின் ஈராக் தளபதி அபு முசாப் அல் -சர்காவியின் வழி நடத்தலின் கீழ் பல நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் அதிரடித் தாக்குதல் நடத்தினர்.

மோட்டார்க் குண்டுகள், ரொக்கெட் ஏவுகணைகள் உட்பட நவீன ஆயுதங்களால் அமெரிக்க நிலைகள் மீது தீவிரமான கடும் தாக்குதலைத் தீவிரவாதிகள் மேற்கொண்டனர்.

ரமாடி நகரின் முக்கிய பகுதிகள் தீவிரவாதிகளின் வசம் வீழ்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. முக்கிய அரசு அலுவலகங்களையும் தீவிரவாதிகள் தமது பிடியில் வைத்துள்ளனர்.

தீவிரவாதிகளால் கைப்பற்றப்பட்ட பகுதிகளை மீட்கும் நடவடிக்கையில் அமெரிக்கப் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதேவேளை, ரமாடி நகரப் பகுதி எங்கும் தீவிரவாதிகள் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளனர். அதில் ரமாடி நகரின் முக்கிய பகுதிகள் எங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரமாடி நகரம் தீவிரவாதிகளின் பிடியில் சிக்கியமை அமெரிக்கப் படையினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ரமாடி நகரத்தை மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது குறித்து அமெரிக்க இராணுவ உயர்மட்டத்தினர் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் ஈராக்கிய தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டுவோம் என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்திருந்த நிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

ஈராக்கை ஆக்கிரமித்த பின்னர் தீவிரவாதிகளின் தாக்குதலில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)



*நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் போர்நிறுத்தத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்துள்ளனர். இதனை நேபாள எதிர்க்கட்சிகள் வரவேற்றுள்ளன. நேபாள மலைப் பகுதியில் மாவோயிஸ்ட் தீவிரவாதி ஒருவர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.*

## சீக்கியர்களின் புனித நூல் பாகிஸ்தான் சென்றடைந்தது

நான்கானாசாஹிப்,டிச.3

சீக்கியர்களின் புனித நூலான 'கிரந்த் சாஹிப்', பூக்களால் அலங்கரிக்கப்பட்ட தங்கப் பல்லக்கில் ஊர்வலமாக பாகிஸ்தானில் உள்ள குருநானக் தேவ் பிறந்த இடமான நான்கானாசாஹிப்புக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான சீக்கியர்கள் கலந்துகொண்டனர். வழி நெடுகிலும் தங்கப் பல்லக்கு ஊர்வலத்துக்கு மக்கள் ஆரவாரத்துடன் வரவேற்பளித்தனர்.

நாடு பிரிவினைக்குப் பிறகு சீக்கியர்களின் மத ஊர்வலம் பாகிஸ்தானுக்குள் செல்வது இதுவே முதல் முறையாகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை டில்லியில் தங்கப் பல்லக்கு ஊர்வலம் தொடங்கியது. செவ்வாய்க்கிழமை வாஹா எல்லை வழியாக பாகிஸ்தானுக்குள் கொண்டுசெல்லப்பட்டது.

பஞ்சாப் முதல்வர் அம்ரீந்தர்சிங்கும் பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாண முதல்வர் பெர்வெய்ஸ் இலாஹியும் சேர்ந்து நான்கானாசாஹிப் குருத்வாராவில் தங்கப் பல்லக்கை ஒப்படைத்தனர். 15 கிலோ தங்கத்தினால் செய்யப்பட்ட இந்தப் பல்லக்கு, பாகிஸ்தானில் உள்ள குருத்வாராவில் நிறுவப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.


## வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட திட்டக் கிராமம் என உங்கள் கிராமம் தெரிவுசெய்யப்பட்டிருப்பின், பயனுகாரியாகப் பின்வரும் அடிப்படை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. பிரதான உழைப்பாளியும் பெரும்பாலான குடும்ப அங்கத்தவர்களும் அக்கிராமத்தில் மீளக் குடியேறியிருத்தல் வேண்டும்.
2. அவர் வீட்டைக் கொண்டிருந்தவராகவும் அது முற்றாகவோ பகுதியாகவோ சேதமுற்றதாக இருத்தல் வேண்டும்.
3. அவரது காணி தொடர்பான ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆவணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஐந்திற்கு குறைவான குடும்ப உறுப்பினர்களுடைய குடும்ப மாத வருமானம் ரூபா 2500/= குறைவாக இருக்கவேண்டும். குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை ஐந்திற்கும் மேற்பட்டிருப்பின் மாதாந்த தலா வருமானம் 500/= ரூபாவுக்கு குறைவாக இருக்கவேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட கிராமத்தவர்கள் அனைவருக்கும் வீடழிவு சமூக நிலை ஆய்வுக்கான படிவம் வழங்கப்படும். பிரதேச செய லக தொழில்நுட்ப அலுவலர் தலைமையிலான குழு அந்த ஆய்வுப் படிவத்தின் பொருத்தமான பகுதிகளைப் பூர்த்திசெய்து தகவல் களைச் சேகரிக்கும்.

தொடர்ந்தும் விவரம் அறிய நாளைய பத்திரிகையை வாசியுங்கள்.

(சி/46378) (24-15-34)


## ஈராக் சிறை நிர்வாகம் வழங்கும் உணவை உண்ண மறுக்கும் சதாம்

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் சிறையில் வழங்கப்பட்டுவரும் உணவை உண்பதற்கு மறுத்துவருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்மீது அமெரிக்கப்படையினர் ஆக்கிரமிப்புத் தாக்குதலை மேற்கொண்ட பின்னர் சதாம் ஹுசைன் கைதுசெய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர்மீது பல வழக்குகள் தொடரப்பட்டன.

தற்போது சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அவர் அமெரிக்கப்படையினரும், சிறைக்காவலர்களும் கொடுக்கும் உணவை உண்பதற்கு மறுத்துவருகிறார். பல நாள்களாக சாப்பிடாமல் அவர் உணவைத் திருப்பி அனுப்பிவருகிறார். சாதாரண கைதிகளைப்போலவே அவர் காணப்படுகிறார் என அவரது சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

அவரைச் சந்திக்க அவரது சட்டத்தரணிகள் சிறைக்குச் செல்லும்போது சதாம் ஹுசைன் கம்பீரமான குரலில் ''நான் சிங்கம் அல்ல; என்னைக்கண்டு பயப்படவேண்டாம், தயங்காமல் எதையும் கேளுங்கள்'' என்று வேடிக்கையாகக்கூறுகிறார். சிறைக்காவலர்களிடமும் இவ்வாறுதான் அவர் கூறுகிறார்.

உங்கள் உறவினர்களை சிறைக்கு வந்து உங்களைச் சந்திக்க ஏற்பாடு செய்யட்டுமா என்று சட்டத்தரணிகள் கேட்டபோது, ''வேண்டாம், இந்தக்கோலத்தில் என்னை உறவினர்கள் பார்த்தால் அவர்கள் கதறி அழுதுவிடுவார்கள்''- என்று சதாம் உருக்கமாகத் தெரிவித்தார் எனவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

(க)

## சர்வதேச அணு மையத்தினூடாகவே ஈரான் அணு விவகாரத்துக்குத் தீர்வு

### இந்தியா வலியுறுத்து

ஈரானின் அணு விவகாரத்தைச் சர்வதேச அணுவிசை மையத்தின் அதிகார வரம்புக்குள் தீர்வுகாண வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக இந்தியாவின் மாநிலங்களவையில், வெளியுறவுத்துறை இணை அமைச்சர் ராவ் இந்திரஜித் சிங் எழுத்து மூலம் நேற்றுமுன்தினம் அளித்த பதில் வருமாறு:-

ஈரான் அணு ஆயுத விவகாரத்துக்கு சர்வதேச அணுவிசை மையத்தின் அதிகார வரம்புக்குள் தீர்வு காணவேண்டும் என்பதே இந்தியாவின் நிலையாகும். இது தொடர்பான சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புக்கும் இந்தியா கடிதம் எழுதிவருகிறது.

கடந்த நவம்பர் 24ஆம் திகதி சர்வதேச அணுவிசை மையத்தின் ஆளுநர் சபைக் கூட்டத்தில் ஈரான் பிரச்சினை விவாதிக்கப்பட்டது.

ஈரான், ஐரோப்பிய யூனியனின் மூன்று நாடுகள் இடையே மீண்டும் இது தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தவேண்டும் என்று அப்போது முடிவானது.

'தீர்வுகாண அதிக அவகாசம் தரவேண்டும், ஈரான் அணுவிசை விவகாரத்தை ஐ.நா பாதுகாப்புச்சபைக்கு அனுப்பக்கூடாது' என இந்தியா தெரிவித்த யோசனையை சர்வதேச அணு விசைமையம் ஏற்றுக்கொண்டது. இதையடுத்து ஈரான் அணு விசைப்பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டும் என்பதற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது என்றார் அவர்.

## இஸ்ரேல் முன்னாள் பிரதமர் அரசியலில் இருந்து விலகினார்

ஜெருசலேம்,டிச.3

இஸ்ரேலின் முன்னாள் பிரதமரும் மூத்த அனுபவமிக்க அரசியல்வாதியுமான ஷிமோன் பெரஸ் அரசியலிலிருந்து விலகியுள்ளார்.

இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் அவர் கூறியதாவது:-

அரசியலிலிருந்து விலகுவது என்பது கடினமான முடிவுதான். இருப்பினும் விலகுகிறேன். இத்தோடு எனது அரசியல் வாழ்க்கை முடிவுக்கு வருகிறது. இருப்பினும் இந்தப் பகுதியின் அமைதிக்காக பாடுபடுவதைக் கைவிடமாட்டேன். மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள பிரதமர் தேர்தலில் பிரதமர் ஏரியல் ஷரோனுக்கு நான் ஆதரவளிப்பேன். பாலஸ்தீனர்களுடன் அமைதிப்பேச்சுகளைத் தொடங்க அவர்தான் தகுந்த நபர்.

தேர்தல் முடிந்த பிறகு அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் ஏரியல் ஷரோன் தீவிரமாகச் செயற்படுவார். இந்தப்பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்த நான் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வேன் என்றார் ஷிமோன் பெரஸ்.

பாகிஸ்தானில் அமைதியை ஏற்படுத்த இவர் மேற்கொண்ட முயற்சிகள் ஏராளம். பாலஸ்தீன சமாதான நடவடிக்கைகளுக்காக கிடைத்த நோபல் பரிசை முன்னாள் பிரதமர் இட்ஷாக் ரபின், பாலஸ்தீனத் தலைவர் யாசிர் அரபாத் ஆகியோர் கூட்டாகப் பகிர்ந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்ததக்கது.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல இன கிறேட் டேன் ஆண் நாயும், பெண் நாயும் விற்பனைக்கு உண்டு. (Harlequin) தொடர்பு: 0777491062 (43344)

Sanyo வகை Model No-PLC - 9005 EA புறொஜெக்ரர் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776569867. (43477)

## வீடு 'காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இல.98, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோயிலடியில் அமைந்துள்ள 2 ½ பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.:021-222 6849, 1-416-895-2060 அல்லது Veedu. Clock tower@hotmail.com. (43074)

29, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் உள்ள 1¼ பரப்புக் காணியுடன் சிறிய வீடு எல்லா வசதியுடனும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள 0776745812, 077 6198191. (43394)

## காணி விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு மிக அருகில் மானிப்பாய் வீதியிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக அமைந்துள்ள 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: திருமதி ரட்ணபிரகாசம், மானிப்பாய் வீதி, உடுவில், சுன்னாகம். T.P. 021-4591125. (43475)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pincher நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தன பாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தை யடி, நல்லூர். (43383)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச் சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ள லாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர. (43384)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப் பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 12.12.2005 திங்கட் கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக்கிளைகளி லும், உடுவில் பாம் சென்ரர் உடுவில், நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர் (43385)

## தவறிவிட்டது

கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த நட ராசபிள்ளை நிறைந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (792513069V) 01.11.2005 அன்று இராமநாதன் கல்லூரிக் கும் இணுவில் பொது நூலகத்திற்கும் இடை யில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியில் ஒப் படைத்துதவவும். (43476)

TATA INDICA V2 வீல் கப் ஒன்று மரு தனார்மடத்திலிருந்து உரும்பிராய் சந்தியினூ டாக திருநெல்வேலிச் சந்திக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவேண்டிய தொலை பேசி இல. 021 222 7398 சன்மானம் வழங்கப்படும். (43474)

## மணமகன் தேவை

வடமராட்சி, கௌரவ இந்து குடும்பம், வயது 26, உயரம் 5'2'', உத்தரம் நட்சத்திரம் 3ஆம் பாதம் கன்னிராசி, 2இல் செவ்வாய், 18 கிரக பாவமுடைய முகாமை உதவியாள ராகப் பணிபுரியும் பட்டாரிப் பெண்ணுக்கு பட்டதாரித் தகைமையுடைய அரச பணி யில் இருக்கும் பொருத்தமான சாதகபலன் கொண்ட மணமகன் தேவை.சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும் தொடர்பு:

T.P.0777436472. (43355)

## மோட்டார் சைக்கிள், கார் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாட கைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக்காரும் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360/10, பிரதான வீதி, (பஸ்தரிப்பிற்கு அரு கில்) யாழ்ப்பாணம் T.P.No . 021-222 9154, 0777 - 593 722, 077 6991899. (43206)

## தாதிப்பயிற்சி

**O/L, A/L படித்த பெண் பிள்ளை களுக்கான தாதிப்பயிற்சி வழங்கப்படும். A/L, Bio படித்தவர்களுக்கு முன் னுரிமை. நேரில் வரவும்**

**சம்பந்தர் மொடேர்ன் வைத்திய நிலையம்**
8, இராமையாச் செட்டியார் வீதி,
(அமுல் கிறீம் கவுஸ் அருகே)
யாழ்ப்பாணம்
(43466) (21.45.46)

## Refresh System

*புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத் திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை,* **மானிப்பாய், 077-6279671, 077-3253104.**
(43247)(42.32.19.11)

## முகிழ்நிலை ஆசிரிய மாணவருக்குக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும் திகதிகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

குறிப்பிட்ட திகதிகளில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை கொடுப்பனவு வழங் கப்படும் என கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பக் கல்விப் பாட முகிழ் நிலை ஆசிரிய மாண வர்களுக்கும்- எதிர் வரும் 7ஆம் திகதி புதன்கிழமை ஆங் கிலம், நூலக விஞ் ஞானம் ஆகிய பாட முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களுக்கும் -

எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக் கிழமை விஞ்ஞானம், கணித பாட முகிழ் நிலை ஆசிரிய மாண வர்களுக்கும் எதிர் வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாடகம், சங்கீதம், நட னம், சித்திரம் ஆகிய பாட முகிழ்நிலை ஆசிரிய மாணவர்க ளுக்கும் கொடுப்பன வுகள் வழங்கப்படும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள் ளகப் பயிற்சியில் கடமையாற்றுபவர் கள் குறித்த திகதி களில் சமுகமளிக்க முடியாத சந்தர்ப்பத் தில் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக் கிழமை தபக்குரிய கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடி யும் என பீடாதிபதி அறிவித்துள்ளார்.

(எ-202)

## யாழ்.வலய அதிபர்களுக்குச் செயலமர்வு


யாழ்ப்பாணம்,டிசெ.3

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எதிர் வரும் காலங்களில் உளவியல், சமூக இடையீடு மற்றும் ஆலோசனை வழி காட்டல் நிகழ்ச்சித் திட்டத்தை நடை முறைப்படுத்துவது தொடர்பாக யாழ். வலயப் பாடசாலை அதிபர்களுக்கு அறி வூட்டல் செயலமர்வு ஒன்று நடத்தப்பட வுள்ளது.

இதன் முதற்கட்ட மாக 50 பாடசாலை, அதிபர்களுக்கான அறிவூட்டல் செய லமர்வு இன்று சனிக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை யாழ். கல்வி வலய முகாமைத் துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் தேசிய ரீதியில் பயிற்சிபெற்ற வளவாளர்களும் வலய வழி காட்டல் ஆலோசனை ஆசி ரிய ஆலோசகரும் வளவாளர்களாகப் பங்கேற்கவுள்ளனர் என யாழ். வலயக் கல்விப் பணிப்பா ளர் அறிவித்துள் ளா.ர. (எ-203)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### ஆனந்தகிருஸ்ணர் ஸ்ரீபாஸ்கரன்

20.10.2005 அன்று அகால மரணமடைந்த எங்கள் குலவிளக்கு அமரர் **ஆனந்தகிருஸ் ணர் ஸ்ரீபாஸ்கரன்** அவர்களின் ஆத்மசாந் திப் பிரார்த்தனையும் அந்தியேட்டி கிரியைக ளும் நாளை (04.12.2005) ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற உள்ளன.

எங்கள் அன்புச் செல்வத்தின் இறுதிக்கிரியை களின்போது துயரில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களையும் நாம் இனம்கண்டபோதும் எல்லோரினதும் இருப்பிடங்களை எம்மால் அடையாளம் காணமுடியவில்லை. இறுதிக்கிரியை களில் பங்குபற்றிய அனைவரும் அந்தியேட்டி நிகழ்வில் பங்குபற்ற வேண் டும் என்பது எமது பெருவிருப்பமாகும். இதனால் அனைவரின் இருப்பிடங் களையும் தேடிச்சென்று அழைப்பிதழ் கொடுப்பதென்பது முடியாதகாரியமா கும். எனவே, இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக மனமுவந்து ஏற்று அன்றைய தினம் அதிகாலை 5 மணியளவில் வியாபாரி மூலை கலைமணி சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதன்பின் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வியாபாரிமூலை,
பருத்தித்துறை. (43307) குடும்பத்தினர்.

U.S. DEPARTMENT of STATE
TRAVEL.STATE.GOV
இந்தா அரிய சந்தர்ப்பம் நழுவ விடாதீர்கள்

வருடந்தோறும் அமெரிக்க அரசினால் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு 55000 பேருக்கு வழங்கப்படும் வதிவிட விசாவுக்காக

**உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரிசீலிக்க!!!**



**சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்**

**முடிவுத்திகதி 04.12.2005 வரைக்கும்**

தொடர்புகளுக்கு

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

38, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993

## பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

**புன்னாலை சுகாதாரக் கிராமம் பிராந்திய பயிற்சி நிலைய வளாகத்தினுள் சிற்றுண்டிச்சாலை நடத்து வதற்கான உரிமையை 01.01.2006 முதல் 31.12.2006 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுதல்**

மேற்படி விடயமாக உள்ளூராட்சி சபைகளில் வலுவான உரிமம் பெற்றுச் சிற்றுண்டிச்சாலை நடத்திய தகைமையும் முன் அனுபவமும் உடையவர்களிடமிருந்து திறந்த கேள்வி கள் கோரப்படுகின்றது. உரிய கேள்விப்படிவங்களை மீளளிக்க முடியாத கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 100/=வும் மீள ளிக்கக்கூடிய கேள்விப்பிணையாக ரூபா 1000/= வும் செலுத்தி 13.12.2005 பி.ப.15 மணிவரை மேற்படி பணிமனையில் பெற் றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 14.12.2005 மு.ப. 10 மணிக்கு முன்பாக அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்பட வேண்டும். தபாலில் அனுப் பப்படுமாயின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பாக மாட் டாது. கேள்விகள் அன்றையதினம் உடனடியாகத் திறந்து ஆரா யப்படும். அத்தருணம் கேள்விகாரர் பிரசன்னமாக இருக்க முடியும். வேறு விவரங்களை அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம். கூடுதல் கேள்வி அடிப்படையில் குத்தகை வழங்கப்படும். கேள்விகள் ஏற்றல், நிராகரித்தல் விடயத்தில் திணைக்களக் கேள்விச்சபையின் தீர்மானமே இறுதியானதாகும்.

(சி-46494)(2145.46) வைத்திய கலாநிதி **ஆ.கேதீஸ்வரன்,**
மாகாணப்பிரதிப் பணிப்பாளர்,
*02.12.2005* சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### இராமசாமி உருத்திரா

B.Sc. (Lond). Advocate

உயர்ந்தோங்கு தோற்றமதில் உயர்குணத்து உருத்திரரே
உயர் மன்றில் வாதாடி வழக்குரைத்த வல்லவரே
தொட்ட வழக்கிலெல்லாம் நீதிக்காய் நீருழைத்தீர் அதனால்,
சட்டத்தரணிகளில் சந்திரனாய் வலம் வந்தீர்
உருத்திரையாய் உமக்குற்ற உத்தமியைத் தவிக்கவிட்டே
உருத்திரனார் பதம் பற்றமுந்தியது முறையோ ஐயா!
ஓம் சாந்தி!

(43508)(21.45.46) தங்கள் அன்புக்குப் பாத்திரமான
**மு.தர்மலிங்கம்**
சமாதான நீதிபதி, புலோலி மத்தி, பருத்தித்துறை.

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி மயில்வாகனம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி மயில்வாகனம் அவர்கள் 29-11-2005 லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்றவர்களான சோதிநாதன் - விசாலாட்சி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் திலகவதி, சிவசுந்தரம், சிற்றம்பலம் சுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுகுமார், விஜயகுமார், அருண் குமார், ரோகினி, சாந்தினி, உருத்திரா அருந்ததி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சோபா, சுகி, இந்திரலீலா, மனோரஞ்சன், சிவபாலன் காமினி, சிவராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04-12-2005) ஞாயிற் றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*272, ஆனந்தன் வடலி வீதி,* *திலகவதி (சகோதரி).*
*அரியாலை,யாழ்ப்பாணம்* (43507)(26-45.46)

## வலுவிழந்தோர் தின நிகழ்வுகள்

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் சர்வதேச வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு கண்ணிவெடி விழிப்புணர்வுத் தொடர்பகங்கள்மூலம் இன்று வன்னிப் பிரதேசம் எங்கும் விசேட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.

கிளிநொச்சி, பளை, பூநகரி, புதுக்குடியிருப்பு, மாங்குளம் பனங்காமம், நெடுங்கேணி, கனகராஜன்குளம், ஆண்டான்குளம், பாலம்பிட்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனத் தொடர்பகங்களில் இன்று முற்பகல் 10 மணிக்கு இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (எ-203)

## பயன்படுத்த முடியாத நிலையில் பாலிநகர் வீதி

ஒட்டுசுட்டான், டிசெ.3

முல்லைத்தீவு பாலிநகர் 30 வீட்டுத் திட்டத்தில் குடியிருக்கும் மக்கள் பயன்படுத்தும் வீதி புனரமைக்கப்படாமல் உள்ளது. இதனால் இவ்வீதியில் பயணம் செய்வோர் பல்வேறு சிரமங்களை அடைகின்றனர்.

மழை காலம் ஆரம்பிக்கும் முன்னர் இவ்வீதி புனரமைக்கவென தெரிவுசெய்யப்பட்டது. எனினும் மழைகாலம் தொடங்கியதால் புனரமைப்புப் பணிகள் நடைபெறவில்லை.

தற்போது வெள்ளம் தேங்கி நின்று வீதியில் பயணம் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதனால், மக்கள் பெருஞ் சிரமம் அடைகின்றனர். (த-341-204)

## மனித உரிமைகள் குறித்த பயிற்சிக் கருத்தமர்வுகள்

கிளிநொச்சி, டிசெ.3

டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிகள் பல்வேறு இடங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள கீரிசுட்டான் கிராம சமூக பொருளாதார அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கு கடந்த 29ஆம் திகதியும் பட்டிக் குடியிருப்பு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு கடந்த 30ஆம் திகதியும் பயிற்சிகள் நடத்தப்பட்டன. (த-202)

# உணவகங்களில் சுகாதாரத்தை இறுக்கமாகப் பேண அறிவுறுத்து

வட்டக்கச்சி, டிசெ.3

தமிழர் தாயகப் பகுதியில் இயங்கும் உணவக உரிமையாளர்களுக்கு தமிழீழ சுகாதார சேவையினர் அவசர வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளனர்.

அவ்வேண்டுகோளில் எந்தக் காரணம் கொண்டும் உணவை வெறுங்கையால் பரிமாற வேண்டாம் என்றும், உணவுப் பாத்திரங்கள், தேனீர் பாத்திரங்களைச் சுடுநீரால் அல்லது தொற்று நீக்கிகள் கொண்டு கழுவுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

உணவுக் களஞ்சிய அலுமாரிகளை இலையான் புகாதவாறு இறுக்கமாக மூடிவைத்து, பயனாளியால் கேட்கப்படுகின்ற உணவுகளை மாத்திரம் விநியோகிக்க வேண்டும்.

கொதித்தாறிய நீரை மாத்திரம் பருகுவதற்கு வழங்குவதோடு, கழிவகற்றல் நடைமுறைகளை உரியவாறு கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறைகள் யாவும் தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகின்றன என்றும் தமிழீழ சுகாதார சேவை நடுவப் பணியகத்தினர் அறிவித்துள்ளனர். (த-405)

# தமிழர் புனர்வாழ்வுக் கழக ஏற்பாட்டில் முகாமைத்துவ மாணவர் கௌரவிப்பு

கிளிநொச்சி, டிசெ.3

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முகாமைத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் பட்டப்படிப்புகளுக்கான ஆரம்ப விழா நிகழ்வும் அண்மையில் கிளிநொச்சியிலுள்ள கழகத்தின் நடுவப் பணியகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

கழகத்தின் பிரதான கணக்காளர் ந.சிறீஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசியுரையை கிளிநொச்சி கந்தசாமி ஆலய பிரதான குருவான ரட்ணேஸ்வரக் குருக்களும் கருத்துரைகளை கல்லூரி விரிவுரையாளர் அருள்நாதன், சென். யோன்ஸ் கல்லூரி ஆசிரியர்களான அகஸ்ரின், யுகபாலசிங்கம் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் ஜெயராஜ் ஆகியோரும் நிகழ்த்தினர்.

சிறப்புரைகளை யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி கே.தேவராசா, அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி ஆகியோர் நிகழ்த்தினர்.

மாணவர்களுக்கான பரிசில்களைச் சிறப்பு விருந்தினர்களும் கழகத்தின் சிறுவர் நலன் திட்டப் பிரிவுப் பணிப்பாளர் இராசு இரவி ஆகியோரும் வழங்கிக் கௌரவித்தனர். (த-202)

# மழையினால் வீதிகள் சேதம்; அதனால் விபத்துகள் அதிகம்!

கடந்த வாரம் பெய்த தொடர் மழை காரணமாகவும் இரணைமடு வான் கதவுகள் திறக்கப்பட்டதாலும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் வட்டக்கச்சிப் பகுதியில் பெருமளவு வீதிகள் சேதமடைந்துள்ளன. இதனால் தொடர்ச்சியாக விபத்துகள் இடம்பெற்று வருகின்றன. வெள்ளம் வாரடித்து ஓடிய வேகத்தில் வீதிகள் பலவற்றின் கற்கள் அள்ளுண்டு போய்விட்டன. இதனால் வீதிகளில் பாரியகுழிகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த வீதிகள் ஊடாக சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் விபத்துக்களைஎதிர் நோக்கி வருகின்றனர்.

பன்னங்கண்டி வீதியில் இவ்வாறு ஏற்பட்ட குழியில் விழுந்து கடந்த29 ஆம் திகதி இளைஞர்ஒருவர் படுகாயமடைந்தார். இதேபோல வேறு பல வீதிகளிலும் அவ்வப்போது விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. எனவே, மழையினால் சேதமடைந்த வீதிகளைச் செப்பனிடுவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கேட்டுள்ளனர். (த-405)

## பிற்போடப்பட்டுள்ளது

வட்டக்கச்சி, டிசெ.3

கிளிநொச்சி மாற்றுத் திறனான வலுவுள்ளோர் சங்கத்தினரால் இன்று ஏற்பாடாகியிருந்த 'சர்வதேச மாற்றீடான வலுவுள்ளோர் தின விழாவும் பதினைந்தாம் ஆண்டு நிறைவு விழாவும் இன்று நடைபெறமாட்டாது எனவும் -

எதிர்வரும் 22ஆம் திகதி இவ்விழா நடைபெறும் எனவும் கிளிநொச்சி மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

காலநிலை காரணமாகவும் [illegible] ரத்து சீரின்மை காரணமாகவும் [illegible] களின் நலன்கருதி இவ்விழா [illegible] டுள்ளது என நிர்வாகத்தினர் [illegible] (த-405)

## கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம் திறப்பு

ஒட்டுசுட்டான், டிசெ.3

ஒட்டுசுட்டான் 17ஆம் கட்டை [illegible] தில் அமைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி சங்கத்துக்கான புதிய கட்டடம் [illegible] 13ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

கட்டடத்தை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

கருத்துரைகளை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தேவன், ஊடக மேம்பாட்டுப் பொறுப்பாளர் பொன்.கந்தசாமி ஆகியோர் நிகழ்த்தினர். (த-341-204)

## குளவிசுட்டானில் தொழில்விருத்திக் கடன்

கிளிநொச்சி, டிசெ.3

நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் டென்மார்க் அகதிகள் புனர்வாழ்வுப் பேரவையின் நிதி உதவியுடன் குளவிசுட்டான் கிராமத்தைச் சேர்ந்த 20 பேருக்கு தனிநபர் தொழில் விருத்திக்கென தலா 20 ஆயிரம் ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுழற்சிமுறைக் கடனாக இது வழங்கப்பட்டது.

கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற இந்நிகழ்வில் நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வுத் திட்ட இணைப்பாளர், வெளிக்கள உத்தியோகத்தர்கள், சமூக வலுவூட்டாளர்கள், கிராம அலுவலர், பிரதேச அரசியல்துறை உறுப்பினர்கள் சமூக பொருளாதார அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-203)



மாவீரர் நாளை முன்னிட்டு முழங்காவில் காவல் பணிமனை பொறுப்பதிகாரி எஸ்.குகநாதன் தலைமையில் காவல்துறை அலுவலர்கள் முழங்காவில் அரசினர் வைத்தியசாலையில் சிரமதானப் பணியை மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட படத்தை முதலாவதாகவும் -

ஜெயபுரம் வர்த்தக சங்கத்தினர் முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அருகில் உள்ள பிரதான வீதிகளில் உள்ள மரங்களை வெட்டி சிரமதானம் செய்தபோது எடுக்கப்பட்ட படத்தை இரண்டாவதாகவும் காணலாம். (த-415)

# கிளி.ஆஸ்பத்திரியின் மகப்பேற்று பிரிவுக்கு தமிழீழ சுகாதார சேவையினர் பாராட்டு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் மகப்பேறு சம்பந்தமான சிகிச்சைகள் சிறப்பானவையாக உள்ளன என்று தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் கா.ஒவியன் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற மகப்பேற்று சிகிச்சைகள் தொடர்பாக தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:- ஒக்ரோபர் மாதத்தில் 164 குழந்தைப் பிறப்புகள் இடம்பெற்றுள்ளன. அதில் ஒரேயொரு இறந்த பிறப்பு (Still birth) மட்டுமே இடம்பெற்றுள்ளது. இது மிகச் சிறந்த பெறுபேறாகும்.

அத்துடன் 11 சிசேரியன் சத்திர சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளதன் மூலம் தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படும் உடல், உள துயரங்கள் களையப்பட்டுள்ளன. நிறைகுறைவான பிறப்புக்களும் 11.6 சதவீதமாகவே உள்ளமையும் சிறப்பானது.

இலங்கையில் நிறைகுறைந்த பிறப்புக்களின் சராசரி 20 சதவீதமாகும்.

தங்களது சிறப்பான சேவைகளுக்கு எமது பூரண ஒத்துழைப்பினை வழங்குவதுடன் பாராட்டுக்களையும் தமிழீழ சுகாதார சேவையின் சார்பில் தெரியப்படுத்துகின்றோம் - என்று அதில் தெரிவித்துள்ளார். (த-405)

## தமிழீழ வைப்பக எழுத்துத் தேர்வு

வட்டக்கச்சி, டிசெ.3

தமிழீழ வைப்பகத்தின் உத்தியோக உதவியாளர் தரம்-2 இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எழுத்துத் தேர்வு இன்று யாழ். சாலை கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரிகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் அருகிலுள்ள தமிழீழ வைப்பகக் கிளைகளில் தமது பெயர் விவரங்களைப் பார்வையிடலாம் என்றும் தமிழீழ வைப்பகத்தின் நடுவப் பணியக மனிதவளை மேலாளர் அறிவித்துள்ளார். (த-405)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

## பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள்

இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை அதிபர் சேவை ஆகியவற்றுக்கு ஆள்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கும் அதிபர் சேவையில் வினைத்திறன் காண்தடைப்பரீட்சைக்கும் தோற்றுபவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திவருகின்றது.

இவ்வகுப்புகள் கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் இன்றும் நாளையும் நடத்தப்படவுள்ளன. கிளிநொச்சியில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும் முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, யோகபுரம் மகா வித்தியாலயம் ஆகிய இடங்களிலும் இவ்வகுப்புகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. துறைசார் வல்லுநர்களால் நடத்தப்படுகின்ற இவ்வகுப்புகள் காலை 8.30 மணிதொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறும் எனவும் - இவ்வகுப்புகளில் குறைந்த கட்டணத்தில் பொருத்தமான கையேடுகளும் வழங்கப்படவுள்ளன என்றும் - குறித்த பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் பங்குகொண்டு பயனடையுமாறும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (த-405)



முழங்காவில் அரசினர் வைத்தியசாலை மிகவும் பழைமைவாய்ந்த கட்டடங்களிலேயே இயங்கிவருகின்றது.

அந்த வைத்தியசாலையின் பெண் நோயாளர் விடுதிக் கட்டடத்தின் ஒரு பகுதியையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். கட்டடத்தின் கீழ்ப்புறத் தூண்கள், சுவர்கள் சிதிலமடைந்த நிலையில் இருப்பதை இதில் அவதானிக்கலாம். (படங்கள்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# ஜனவரி முதல் 143 கிராம அலுவலருக்கு மாவட்டத்துக்குள் இடமாற்றங்கள்

வலிமேற்கு,டிசெ.3

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவிஅரசாங்க அதிபர் பணிமனைகளில் கடமையாற்றும் 143 கிராம அலுவலர்களுக்கு எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மாவட்டத்துக்குள் இடமாற்றம் வழங்கப் பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாகவும் 13.10.2005 அன்று நடைபெற்ற கிராம அலுவலர்களின் இடமாற்றச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகவும் - யாழ். அரச அதிபர் க.கணேஷினால் இந்த இடமாற்றங்கள் வழங்கப் பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களுக்குப் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த இடமாற்றத் திட்டத்தின் கீழ் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள கிராம அலுவலர்களின் பெயர் தற்போதைய பிரிவு பற்றிய விவரம் வருமாறு:- (இடமாற்றம் பெறும் கிராம அலுவலர் பிரிவு இலக்கம், பிரதேச செயலகம் பற்றிய விவரம் அடைப்புக் குறிக்குள்)

கு.சந்திரன்-வேலணை (ஜே/124 நல்லூர்), ம.அம்பிகைபாகன்-வேலணை (ஜே/58 ஊர்காவற்றுறை), த.பரமேஸ்வரன்- வேலணை (ஜே/127 நல்லூர்), வி.குலசிங்கம் - வேலணை (ஜே/107நல்லூர்), ப.விநாயகமூர்த்தி-வேலணை (ஜே/53 ஊர்காவற்றுறை), ந.தனபாலசிங்கம்-வேலணை (ஜே/76 யாழ்ப்பாணம்), திருமதி. இ.பரமேஸ்வரன் - வேலணை(ஜே/119 நல் லூர்), இ.ரமேஸ் - வேலணை (ஜே/194 உடுவில்), செ.சிவா - வேலணை (ஜே/138 சாவகச்சேரி), ஜே.பி.சேவியர் -வேலணை (ஜே/272 கோப்பாய்), சி.இரட்னேஸ்வரன் - வேலணை(ஜே/87 யாழ்ப்பாணம்), கா.கணேசலிங்கம் -வேலணை (ஜே/37 ஊர்காவற்றுறை), பி.அ.மரியதாஸ் வேலணை (ஜே/143 சண்டிலிப்பாய்)-.

க.சகாதேவன் - ஊர்காவற்றுறை (ஜே/111 நல்லூர்), சி.கணபதிப்பிள்ளை - ஊர்காவற்றுறை (ஜே/123 நல்லூர்), யோ.பத்திநாதன்-ஊர்காவற்றுறை (ஜே/68 யாழ்ப்பாணம்), எஸ்.எம்.தர்மலிங்கம் - ஊர்காவற்றுறை (ஜே/41காரைநகர்), ம.றெ.ஜெயதரன் - ஊர்காவற்றுறை (ஜே/73 யாழ்ப்பாணம்), வ.வடிவழகையன் - ஊர்காவற்றுறை (ஜே/42 காரைநகர்), க.இராமேஸ்வரன் - ஊர்காவற்றுறை (ஜே/10 வேலணை)-

தி.சிறிஸ்கந்தராசா - காரைநகர் (ஜே 126 நல்லூர்), இ.இராசதுரை - காரைநகர் (ஜே/180 சங்கானை),-

இ.கமலவேணி - யாழ்ப்பாணம் (ஜே 120 நல்லூர்), சி.ரவீந்திரதாஸ் - யாழ்ப்பாணம் (ஜே/17 வேலணை), இ.சிவானந்தன் -யாழ்ப்பாணம் (ஜே/36 வேலணை), கு.ஞானசேகரம் - யாழ்ப்பாணம் (ஜே/30 வேலணை), செ.யூலன்-யாழ்ப்பாணம் (ஜே/28 வேலணை), க.விஜயரெட்ணம் -யாழ்ப்பாணம் (ஜே/27 வேலணை) -க.பஞ்சலிங்கம் - நல்லூர் (ஜே/21 வேலணை), க.யோகேஸ்வரன் - நல்லூர் (ஜே/178 சங்கானை), சி.பன்னீர்ச்செல்வம்-நல்லூர் (ஜே/26 வேலணை), க.முருகையா-நல்லூர் (ஜே/158 சங்கானை), வ.சந்தரசேகரம் - நல்லூர் (ஜே/60 ஊர்காவற்றுறை), பாலசிங்கம்-நல்லூர் (ஜே/368 கரவெட்டி), வசந்தகுமார் -நல்லூர் (ஜே/179 சங்கானை), த.இரத்தினேஸ்வரன்-நல்லூர் (ஜே/191 உடுவில்), இ.சந்திரகுமார் -நல்லூர் (ஜே/328 சாவகச்சேரி), வீ.வேலாயுதசேயோன் -நல்லூர் (ஜே/207 உடுவில் ), திருமதி ப.சேய்மானந்தன் -நல்லூர் (ஜே/211 உடுவில்), கு.சாந்தமோகன் -நல்லூர் (ஜே/213தெல்லிப்பழை), வ.சுந்தரலிங்கம் - நல்லூர் (ஜே 54 ஊர்காவற்றுறை), ம.தயாபரன் - நல்லூர் (ஜே/181 சங்கானை), ந.தவநேசன் - நல்லூர் (மருதங்கேணி), போ.இ.ஜேசுதாசன் -நல்லூர் (ஜே/31 வேலணை)-

ரி.நித்தியானந்தன்-சண்டிலிப்பாய் (ஜே/171 சங்கானை), இ.துரைராசா -சண்டிலிப்பாய் (ஜே/157 சங்கானை), பி.நிரூபன் - சண்டிலிப்பாய் (ஜே/176 சங்கானை), ப.சுதர்சன் -சண்டிலிப்பாய் (ஜே/49 ஊர்காவற்றுறை), வி.கே.தனபாலன்-சண்டிலிப்பாய் (ஜே/18 வேலணை), லோ.அருள்ராஜ்-சண்டிலிப்பாய் (ஜே/23 வேலணை), ச.சிறீஸ்கந்தராசா -சண்டிலிப்பாய் (ஜே/174 சங்கானை)-

க.ஜெகதீசன் - சங்கானை (ஜே/210 உடுவில்), க.சிறிகரன்- சங்கானை (ஜே/150 சண்டிலிப்பாய்), வி.ரி.கதிர்காமநாதன் - சங்கானை (ஜே/269 கோப்பாய்), ச.வைத்தியநாதன் - சங்கானை (ஜே/193 உடுவில்), இ.சிறிரஞ்சன்-சங்கானை (ஜே/198 உடுவில்), ஜெ.கதிர்காமநாதன்-சங்கானை (ஜே/329 சாவகச்சேரி), ம.சிறிமுருகவேள் - சங்கானை (ஜே/325 சாவகச்சேரி), ந.மகிழ்ராஜா- சங்கானை (ஜே/205 உடுவில்), ந.சர்வானந்தன்-சங்கானை (ஜே/215 தெல்லிப்பழை), திருமதி இ.குலவீரசிங்கம் - சங்கானை (ஜே/286 கோப்பாய்), திருமதி தி.சிவபாக்கியநாதன்-சங்கானை .(ஜே/141 சண்டிலிப்பாய்), சீ.ஜீவராஜா - சங்கானை (ஜே/188உடுவில்), திருமதி கு.லலிதாம்பாள் - சங்கானை (ஜே/192 உடுவில்), க.குலசிங்கம் - சங்கானை (சாவகச்சேரி)-

சோ.பரமநாதன் -உடுவில் (ஜே/308 சாவகச்சேரி), க.ரவீந்திரன் -உடுவில் (ஜே/223 தெல்லிப்பழை), செ.ஞானசபேசன் -உடுவில் (ஜே/115 நல்லூர்), சு.சிவதாசன்-உடுவில் (ஜே/7 வேலணை), சி.சக்திகிரீவன்-உடுவில் (ஜே/263 கோப்பாய்), வே.சம்பந்தநாதன் -உடுவில் (ஜே/239 தெல்லிப்பழை), க.சிவானந்தன் -உடுவில் (ஜே/266 கோப்பாய்), ந.சிறிமான்-உடுவில் (ஜே/403 பருத்தித்துறை), பா.பாலபத்மன் -உடுவில் (ஜே/392 பருத்தித்துறை), செ.சிவானந்தன் - உடுவில் (ஜே/304 சாவகச்சேரி), சீ.லம்போதரன் -உடுவில் (ஜே/315 சாவகச்சேரி), இ.வை. பிரபாகரன் - உடுவில் (ஜே/145 சண்டிலிப்பாய்), வே.நாகேந்திரராஜா - உடுவில் (ஜே/53 ஊர்காவற்றுறை), பொ.ஜெயகரன் -உடுவில் (ஜே/143சண்டிலிப்பாய்)-

க.கணேசதாஸ் -தெல்லிப்பழை (ஜே/268 கோப்பாய்), சி.தவராசா -தெல்லிப்பழை (ஜே/190 உடுவில்), க.சிவலிங்கம் -தெல்லிப்பழை (ஜே/281 கோப்பாய்), இ.கங்காதரன் -தெல்லிப்பழை (ஜே/203 உடுவில்), சு.பூபாலசிங்கம் -தெல்லிப்பழை (ஜே/168 சங்கானை )-

இ.கணேசலிங்கம்- கோப்பாய் (ஜே/414 பருத்தித்துறை), சு.சண்முகவடிவேல் - கோப்பாய் (ஜே/327 சாவகச்சேரி), செ.செல்வச்சந்திரன் - கோப்பாய் (ஜே/13 வேலணை), க.சிறீஸ்கந்தாசா - கோப்பாய் (ஜே/307 சாவகச்சேரி), நா.மதனசேகரம் - கோப்பாய் (ஜே/137 சண்டிலிப்பாய்), கு.கதிரமலைநாதன் - கோப்பாய் (ஜே/361 கரவெட்டி), பு.சாந்தரூபன் - கோப்பாய் (ஜே/175 சங்கானை), செ.விக்னேஸ்வரன் - கோப்பாய் (ஜே/288 சாவகச்சேரி), சி.உதயகுமார்- கோப்பாய் (ஜே/216 தெல்லிப்பழை), ஐ.சிவானந்தம் - கோப்பாய் (ஜே/341 சாவகச்சேரி), சு.அல்பரட்-கோப்பாய் (ஜே/122 நல்லூர்), செ.சிவகுலசிங்கம் - கோப்பாய் (ஜே/163 சங்கானை),

தி.மகாலிங்கம் - சாவகச்சேரி (ஜே/377 கரவெட்டி), ந.இராசகுமாரன் - சாவகச்சேரி (ஜே/273 கோப்பாய்), சி.சச்சிதானந்தன் சாவகச்சேரி (மருதங்கேணி), பெ.பெ.அ. அலோசியஸ் - சாவகச்சேரி (மருதங்கேணி), க.பாலசிங்கம் - சாவகச்சேரி (ஜே/401 பருத்தித்துறை), வீ.சிவசுப்பிரமணியம் - சாவகச்சேரி (மருதங்கேணி), க.ஸ்ரீவிக்னேஸ்வராசா - சாவகச்சேரி (ஜே/61 யாழ்ப்பாணம்), ஆ.நடராஜா-சாவகச்சேரி (ஜே/268 கோப்பாய்), வெ.நாகதேவன் - சாவகச்சேரி (மருதங்கேணி), வை.துரைசிங்கம் - சாவகச்சேரி (ஜே/381 கரவெடிட்டி), திருமதி ச.சுந்தரலிங்கம் - சாவகச்சேரி (ஜே/ 277 கோப்பாய்), பொ.அற்புதஜெயம் - சாவகச்சேரி (கோப்பாய்), த.மகேந்திரன்-சாவகச்சேரி (ஜே/395 பருத்தித்துறை), க.வாமதேவன் - சாவகச்சேரி (ஜே/356 கரவெட்டி), திருமதி சு.செல்வவிநாயகம் - சாவகச்சேரி (ஜே/271 கோப்பாய்), வி.சிவசரணநாதன் - சாவகச்சேரி (ஜே/414 பருத்தித்துறை), வ.வேல்முருகு - சாவகச்சேரி (ஜே/102 நல்லூர்), சி.ரவீந்திரன் - சாவகச்சேரி (ஜே/408 பருத்தித்துறை), க.சுபாஸ்சந்திரபோஸ் - சாவகச்சேரி (ஜே/404 பருத்தித்துறை), பு. பரமானந்தன் - சாவகச்சேரி (ஜே/384 பருத்தித்துறை), க.உபேந்திரன் - சாவகச்சேரி (ஜே/284 கோப்பாய்), ந.தனபாலசிங்கம் - சாவகச்சேரி (ஜே/77 யாழ்ப்பாணம்), வே.தியாகராசா - கரவெட்டி (ஜே/309 சாவகச்சேரி), தி.வரதராசன் - கரவெட்டி (ஜே/296 சாவகச்சேரி), வை.ஸ்ரீரங்கநாதன் - கரவெட்டி (ஜே/340 சாவகச்சேரி), சி.குணராசா - கரவெட்டி (ஜே/407, பருத்தித்துறை), பா.பரமநாதன் - கரவெட்டி (ஜே/389 பருத்தித்துறை), க.த.புவனேந்திரன் - கரவெட்டி (ஜே/280, கோப்பாய்), ப.குமரேசன் - கரவெட்டி (ஜே/390 பருத்தித்துறை), மா.சிவனேசன் - கரவெட்டி (ஜே/132 சண்டிலிப்பாய்), வ.நேத்திரானந்தம் - கரவெட்டி (ஜே/113 நல்லூர்), கி.ரவிக்குமார் - கரவெட்டி (ஜே/316, சவகச்சேரி), நா.மகாநேசன் - கரவெட்டி (ஜே/118, நல்லூர்), த.நந்தகுமார் - பருத்தித்துறை (ஜே/ 347 சாவகச்சேரி), வே.வன்னிமரம் - பருத்தித்துறை (சாவகச்சேரி), சி.சிவபாலசிங்கம் - பருத்தித்துறை (ஜே/341 சாவகச்சேரி), ச.நாகதீபசோதிரூபன் - பருத்தித்துறை (ஜே/349 கரவெட்டி), சோ.வசந்தகுமார் - பருத்தித்துறை (ஜே/292 சாவகச்சேரி), இ.புலேந்திரன் - பருத்தித்துறை (ஜே/291 சாவகச்சேரி), ந.குமரகுருநாதன் - பருத்தித்துறை (ஜே/380 கரவெட்டி), ந.சேகர் - பருத்தித்துறை (ஜே/195 உடுவில்), செ.டா.தேவகுமார் - பருத்தித்துறை (ஜே/363 கரவெட்டி), சி.தவனேஸ்வரன் - பருத்தித்துறை (ஜே/350 கரவெட்டி), இ.யோகச்சந்திரன் - பருத்தித்துறை (ஜே/312 சாவகச்சேரி), சி.ரவீந்திரன் - பருத்தித்துறை (சாவகச்சேரி), சி.பஞ்சலிங்கம் - மருதங்கேணி (ஜே/412 பருத்தித்துறை), சி.வித்தியாபதி - மருதங்கேணி (ஜே/354 கரவெட்டி).

இடமாற்றம் செய்யபட்டுள்ள கிராம அலுவலர்கள் தமது இடமாற்றம் தொடர்பான மேன்முறையீட்டை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பணிமனைகள் ஊடாகச் செய்ய முடியும் என்றும் -அரச அதிபர், தமது சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார். (எ- 175-86)

## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினம் நல்லம்மா



வேம்படி, முருகமூர்த்தி கோயிலடி, தாவடிதெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் நல்லம்மா அவர்கள் 01-12- 2005 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து-கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும் செல்வராஜா(சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), தவராசா (யாழ்.மாநகரசபை நீர்ப்பகுதி), யோகராசா (கனடா), ரஞ்சிதமலர், யோகமலர், தயாபரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்தியாதேவி (சுவிஸ்), சுசிலாதேவி(சுவிஸ்), பாலசசி, குகனேஸ்வரி (கனடா), பரமநாதன், நாகரத்தினம், தயானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தயான், கபித், டனித்தா (சுவிஸ்), றனுசா, றனுசன்(சுவிஸ்), கீர்த்திகன், கிஷாந்தினி, கிருசாந், சயிந்பானுசன், மிதுலன், வினோஜினி, சுயாசன், ஜெயந்தன்-சுதாயினி, இந்திரகுமார் - ருசாந்தினி, இளஞ்செழியன், விதுசன், நிதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கதீபன், கீர்த்தனா, துவாரகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ந.தவராசா
(மகன்).

தாவடி தெற்கு,
கொக்குவில். (43499)(26-45)

## மக்கள் வங்கிக் கிளைகளில் அடகுவைக்கப்பட்ட நகைகள் ஏலத்தில் விடப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ.3

மக்கள் வங்கிக் கிளைகளில் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் ஏற்கனவே அறிவித்தபடி பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் யாழ். பிரதான வீதி, உரும்பிராய் நீடித்த கருமபீடம், நெல்லியடி, சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி நீடித்த கருமபீடம், யாழ். கன்னாதிட்டி, யாழ். ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் நீடித்த கருமபீடம், காங்கேசன்துறை, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், பருத்தித்துறை ஆகிய கிளைகளில் அடகுவைத்து மீட்கப்படாத தங்க நகைகளே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனை இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நாளை மறுதினம் திங்கட்கிழமையும் தினமும் காலை 9 மணிமுதல் மக்கள் வங்கியின் யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையில் நடைபெறும் என்று மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (எ-204)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 19-09-1996 உதிர்வு 03-11-2005

**செல்வி யசோதினி நாமகரன்**

*(மாணவி, சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை)*

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சுன்னாகம் நாகேஸ்வரி,
வித்தியாசாலை. (43498)(26-45)

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## அறிவித்தல்

**வெளிவாரிப் பரீட்சைகள்**

1. பொதுக்கலைமாணித் தேர்வு பகுதி -II -2002
2. சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி -II -2002

02-12-2005 (வெள்ளிக்கிழமை) நடைபெறவிருந்த மேற்படி பரீட்சைகள் யாவும் 08-12-2005 (வியாழக்கிழமை) அன்று பழைய நேர அட்டவணைப்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.


குறிப்பு: ஏனைய பாடங்கள் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.

பதிவாளர்,
02-12-2005

(சீ/46491)(26-45)



நீர்வேலியில் சூட்டுச்சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டு தடயங்களைச் சேகரிக்கும் கண்காணிப்புக் குழுவினர்.



திருநெல்வேலியில்....



சண்டிலிப்பாயில்.....





படங்கள்:-
பிரபா, கவிதரன்,
சுந்தரலிங்கம்.



உரும்பிராயில்......





கோண்டாவிலில்.....



மெத்தைக்கடையடியில்....



வல்வெட்டித்துறையில்.....



உடுப்பிட்டிச் சந்தியில்.....

# சூட்டுச் சம்பவம் நடந்தவுடன் படையினர் அங்கு வந்தனரா?

## மக்களிடம் 'துருவிய' கண்காணிப்பு அதிகாரிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.3

நீர்வேலிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற இடத்தை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்றுக்காலை பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்ட பிரதித் தலைவர் மற்றிவை னியன்பா ,கண்காணிப்பாளர் ட்றூட் ஜோன்ஸன் ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்றனர்.

அங்கு சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற சமயம் சம்பவ இடத்தில் நின்றவர்களின் வாக்குமூலங்களை அவர்கள் பதிவு செய்தனர்.

சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற சிலமணிநேரங்களில் சம்பவ இடத்திற்கு முதலில் இராணுவத்தினர் வந்தனரா? என்று அங்கு நின்ற மக்களிடம் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் துருவித் துருவி விசாரித்தனர் என்று கூறப்பட்டது.

'பொலீஸாரே முதலில் வந்தனர் பின்னர்தான் படையினர் அங்கு வந்தனர்'என்று மக்கள் பதிலளித்தனர்.

இதேவேளை -

இந்தச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக என்ன கூறுகிறீர்கள் என்று கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவரிடம் உதயன் செய்தியாளர் கேட்டார்.

'இப்போது நாம் விசாரணைகளை மட்டும் மேற்கொள்கிறோம். இந்தச் சூட்டுச் சம்பவம் பற்றிய தகவல்களை இப்போதைக்கு நாம் கூறமுடியாது-' என்றார். (த-7-13)

**Focus Net - .போக்கஸ் நெற்**



யாழ். இந்துமகளிர் கல்லூரி முன்பாக
120, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
வழங்கும் விசேட சலுகை
இலவச அமெரிக்க விசா -2007
இன்றும் நாளையும்- இறுதி நாள்கள்
எமது நிறுவனத்தினூடாக விண்ணப்பிக்க கட்டணம் ஏதுமில்லை.
இலவசம்! இலவசம்! இலவசம்!
எம்மால் மட்டுமே முடிந்த ஒன்று.

## தீவகக் கல்விவலய அலுவலர்கூட்டம்

தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த சகல உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்களுக்குமான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை தீவக கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
(எ-204)

**S* A.S. வகுப்புகள்**
3ஆம், 4ஆம் திகதிய வகுப்புகள் நடைபெறாது.
10ஆம் திகதி சனிக்கிழமை வகுப்புகள் நடைபெறும்.
**திரு. T.தவசேகர்**
D.M.I யாழ்ப்பாணம். (43521)

# மரண அறிவித்தல்கள்

## டொன்பேல் சேரம்



கண்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட டொன்பேல் சேரம் அவர்கள் 01.12.2005 அன்று காலமானார்.

அன்னார் (யாழ். சலுசலாவின் முன்னாள் முகாமையாளர்) சுசிலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முன்னாள் பொலீஸ் அதிகாரியான சுப்பையா மாணிக்கம் அவர்களின் மருமகனும் உஷா (லண்டன்), மதுஷா (கட்டார்), தனுஸ்க்க அவர்களின் தந்தையும் துஷ்யந்தன் (லண்டன்), டிலிப்குமார் (கட்டார்) அவர்களின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு, கல்ஹிசையில் நடைபெறும்.

*79/2, பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி.*
(43520)
*தகவல்:*
*கை.கணேசலிங்கம்.*

## வேலுப்பிள்ளை கனகரத்தினம்




கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை கனகரத்தினம் 30.11.2005 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி வேலுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் மகேந்திரன் (ஜேர்மனி), இராசன் (ஜேர்மனி), மங்கயர்க்கரசி, தேவி, மலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நடராசா, குணரத்தினம் ஆகியோரின் சகோதரனும் தவானந்தன், விக்கினேஸ்வரன், சிறிதரன், சிவயோகநாயகி, பத்மசிறி ஆகியோரின் மாமனாரும் கதிரவேலு, இராசதுரை (கனடா), வசந்தன் (ஜேர்மனி), பரமேஸ்வரன் (ஜேர்மனி), வரதநாயகி (கனடா), தேவநாயகி (ஜேர்மனி), கலையரசி (ஜேர்மனி), சண்முகநாதன், ராசாத்தி, விஜயலக்சுமி, பாக்கியலக்சுமி, செல்வரத்தினம், மகேஸ்வரி, காலஞ்சென்ற இரத்தினம், சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (03.12.2005) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு காரைக்கால் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை ஒழுங்கை,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*
(43518)
*தகவல்:*
*க.மகேந்திரன் (மகன்),*
*க.புவநேந்திரன் (மகன்).*





நகரில் தீப்பற்றி எரிந்த கடையை முதற் படத்தில் காணலாம். மாநகர தீயணைப்புப் பிரிவினர் பவுஸரில் இருந்து வாளி மூலம் நீரை எடுத்து தீயை அணைக்கும் அவல நிலையை அடுத்த படத்திலும் காணலாம்.
(படங்கள்:- பிரபா)

# காத்தான்குடி பிரதேச செயலர் மீது சூடு!

பட்டிருப்பு, டிசெ.3

காத்தான்குடிப் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். பளீல் நேற்று நண்பகல் இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டு படுகாயமுற்ற நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தனது அலுவலகக் கடமைகளுக்காக காத்தான்குடி பிரதேச செயலகத்தில் நேற்று அவர் இருந்தபோது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்தோர் அலுவலக ஜன்னல் கண்ணாடி ஊடாகத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாகக் காத்தான்குடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பல்கலை ம[illegible]ணவர்கள் குருநகரில் ஆய்வு

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ். பல்கலைக் கழக திட்டமிடல் பிரிவு முதலாம் ஆண்டு மாணவர்கள் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு குருநகர் அடுக்கு மாடிப் பகுதி யில் ஆய்வு நடவ டிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

அப்பகுதியில் மக்கள் இதற்கு ஒத் துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள் ளது.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆய்வில் விரிவுரையாளர் செல்விடொறின் அருளானந்தமும் கலந்துகொள்வார்.

(8)

## ஹர்த்தாலால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடக்கினர். படைநிலைகள் மீது கிரனேட் குண்டுகள் வீசப்பட்டன. அப்போது படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால், பலர் காயமடைந்தனர்.

காலைமுதல் பெரும் எண்ணிக்கையான படையினர் பல இடங்களிலும் காணப்பட்டனர். இதனால் பதற்றமான சூழல் உருவாகியது.

திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திப் பகுதியில் மாணவர்கள் - படையினர் இடையே முறுகல் ஏற்பட்டது. தென்மராட்சியில் சாவகச்சேரியில் படையினர்மீது கற்கள் வீசப்பட்டன.

பலாலி வீதி, காங்கேசன்துறை வீதி, பருத்தித்துறை வீதி, மானிப்பாய் வீதி போன்ற முக்கிய வீதிகளில் வீதித்தடைகள் போடப்பட்டன. ரயர்கள் எரியூட்டப்பட்டன. இதனால், படையினரின் போக்குவரத்துகள் தடைப்பட்டன. அவர்கள் முகாம்களுக்குள் முடங்கவேண்டி ஏற்பட்டது.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமத்தின் பகுதிகள், தீவகம் எங்குமே ஹர்த்தால் முழு அளவில் அனுஷ்டிக்கப்பட்டதாக பிரதேச செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

மீசாலை, மந்திகை, கைதடி, இருபாலை பகுதிகளில் இராணுவ நிலைகள், ஈ.பி.டி.பி. அலுவலகங்கள் மீது கிரனேட்டுகள் வீசப்பட்டன. இதனால், இந்தப் பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டது. நேற்றுமாலை முதல் கிரனேட் குண்டுவீச்சுச் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்றன. தொடர்ந்து இரவிலும் பல சம்பவங்கள் இடம்பெற்றன.

நேற்றிரவு 7.30 மணியளவில் பிறவுண் வீதியிலும் 8.30 மணியளவில் கலட்டிச் சந்திப் பகுதியிலும் 9 மணியளவில் இருபாலைச் சந்தியிலும் இராணுவ நிலைகள் மீது கிரனேட்டுகள் வீசப்பட்டன.

மந்திகையிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகம் மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் படைச்சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

கைதடிச் சந்தியிலும் கிரனேட் வெடிப்புவச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பதற்றமடைந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறினர் எனத் தெரியவந்தது.

(ஐ-3-7-11-12-13-14-15-17-31-70-72-75-78-86-111-117-135-173-180)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தசாப்த கால யுத்தத்தில் முக்கிய தளபதியாக இராணுவத்தில் பணியாற்றியவர் சரத் பொன்சேகா.

இராணுவத் தளபதிகளிலேயே இவர் ஒருவர்தான் யுத்த களத்தில் காயமடைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1970ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்த இவர், யாழ். இராணுவத் தளபதியாக பணியாற்றினார். இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் பயிற்சி பெற்றவர். இவர் ஸ்ரீலங்கா அரசின் உயரிய பதக்கங்களையும் பெற்றவர்.

## தேச விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது குடாநாட்டில் இடம்பெற்று வரும் யுத்தநிறுத்த மீறல்கள், மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் இராணுவ புலனாய்வுத்துறையினரும் அவர்களோடு சேர்ந்தியங்கும் ஈ.பி.டி.பி. ஒட்டுக்குழுவினரும் ஈடுபட்டுள்ளமை வரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

குறிப்பாக கடந்த 20 ஆம் திகதிக்கு பின்னர் நீர்வேலி, நெடுந்தீவு, பண்டத்தரிப்பு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தச் சந்திப்பு இடம்பெற்று சிலமணி நேரத்திலேயே மீண்டும் நீர்வேலியில் இரு இளைஞர்கள் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டும் ஒருவர் படுகாயத்துக்கும் உள்ளாக்கப்பட்டும் உள்ளனர்.

இச் சம்பவத்தை எமது தேச விடுதலைப் பற்றாளர்களை அழித்தொழிக்கும் நயவஞ்சக செயலாகவே கருதுகின்றோம். எனவே இச்சம்பவங்களை மிக வன்மையாக யாழ். மாவட்ட அரசியல்துறை கண்டிப்பதோடு இவ்வாறான சம்பவங்கள் தொடரும் நாள்களில் இடம்பெறாது இருக்க ஆக்க பூர்வமான நடவடிக் கைகளை விரிவுபடுத்துமாறு வேண்டு கிறோம். - என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

(த)

## நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீயை அணைக்க முடிந்தது. தீயணைப்பு முயற்சி பலனளிக்காது ஒரு கடை முற்றாக எரிந்து நாசமாகியது அடுத்து உள்ள கடைக்கு சேதங்கள் ஏற்பட்டன. மின்சார சபையினர் அவ்விடத்துக்கு விரைந்து வந்து அப்பகுதிக்கான மின் விநியோகத்தைத் துண்டித்தனர். அந்தப் பகுதியில் உள்ள காவலரணில் தங்கியிருந்த படையினரும் பொதுமக்களோடு இணைந்து தீயை அணைக்க உதவினர்.

கடையில் தீ பரவியதற்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை.

முற்றாக எரிந்து நாசமாகிய கடையில் இருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான பிஸ்கட்டுகள், இனிப்பு மற்றும் சிற்றுண்டி வகைகள் அழிந்துவிட்டன என்று அதன் உரிமையாளர் பொலீஸில் முறையிட்டிருக்கிறார். கடையின் பின்புறமாக ரயர் கொளுத்தி வீசப்பட்டதாலேயே கடையில் தீ பரவியதாக தாம் சந்தேகிப்பதாகவும் அவர் முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறார்.

(ஐ-7-8)

## இலங்கைக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல நடவடிக்கைகளை இவர் மேற்கொண்டுள்ளார். முன்னதாக விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தரான கௌசல்யன் கொல்லப்பட்டபோது, ஐக்கிய நாடுகள் சபை அனுதாப அறிக்கை வெளியிடவும் இவரே காரணகர்த்தாவாக இருந்தவர். இவர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வருவது தொடர்பில் போதியளவு ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன. அதுபற்றிப் பேசுவதற்கு நேரமொன்றை ஒதுக்கித் தரவேண்டும். அவரை மாற்றுவதற்கான ஏற்பாடுகளையும் செய்யவேண்டும்.

- இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினம் மார்க்கண்டு



இளவாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் மார்க்கண்டு பிரான்ஸில் 30-11-2005 புதன் கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீ.மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் விஜயரட்ணம் (இளவாலை), தர்மரட்ணம் (நல்லூர்), நடராஜா (ஹொலண்ட்), குலசிங்கம் (லண்டன்), ஜெயபாலசிங்கம் (பிரான்ஸ்), கனகாம்பிகை (சுதா-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவயோகம், புவனேஸ்வரி (மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை), சித்திரா (ஹொலண்ட்), மைதிலி (லண்டன்), கோகிலா (பிரான்ஸ்), சிவனேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் கஜன், ஜோதினி, வேணுகானன், சித்தார்த், சக்தி, உமேஸ், உஷா, மனோஜா, சங்கர், நிறைஞ்சிகா, சரப்பிரியா, சுதர்சன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.12.2005 திங்கட்கிழமை காலை பிரான்ஸில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லூரி வீதி,
இளவாலை.

(43516)
(54-11-13)

தகவல்:
தர்மரட்ணம் -நல்லூர்
விஜயரட்ணம் இளவாலை.
(மகன்மார்)

## காசிப்பிள்ளை நாகம்மா

காரைநகரைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை நாகம்மா நேற்று (02.12.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காசிப்பிள்ளையின் மனைவி ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2005) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*அளவெட்டி.*
*தொ.பே.: 0779512523*

(43522)
(54-11-13)

தகவல்:
வாசுதேவன் (மருமகன்)

ஐடியல் அக்கடமி
67/5, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்நகர்.
தரம் 6 முதல் O/L வரை
கல்வியாண்டு - 2006
ஆரம்பம்: 10.12.2005
சனி காலை 8 மணி
ஆசிரியர் விவரம் 08.12.2005 உதயனில்
கணித ஆசிரியரும், நிர்வாகியும்
V.N.பத்மநாதன் (43483)

கல்வியாண்டு-2006
தரம் 1 முதல் O/L வரை
ஆரம்பம்: 09.12.2005
வெள்ளி 4.30
கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ். (43217)

SKY COMPUTER SYSTEMS.
89A, Kandy Road, Jaffna.
Tel: 021 222 9109
E-Mail: skymathy@sltnet.lk
Pentium II 400 MHZ- 16,000/-
Pentium IV Pentium III
Genuine intel Dealer
* COMPUTER SALES
* COMPUTER REPAIR
[illegible] PARTS
[illegible] MAINTANACE
17" Monitor - 7,900/-
அனைத்துக் கணனிகளுக்கும் 1 வருட உத்தரவாதம்
MOBILE SERVICE
(யாழ் கச்சேரிக்கு அருகில்)

LONDON ENGLISH COLLEGE
NO:105, Arasady Road, Jaffna.
T.P: 021-2225889, 0777252180
BCNS
No: 229A, Mitcham Road, Tooting, London, SW 17910 UK
ஆங்கில வகுப்புக்கள் - ஆரம்பக்கல்வி (தரம் 1, 2, 3, 4, 5, 6)
சிறந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் வகுப்புக்கள் மட்டுப் படுத்தப்பட்டவை கட்புல செவிப்புல சாதன பயன்பாடு பேச்சுப்பயிற்சிக்கு முக்கியம் அளித்தல்.
இடை நிலை உயர் நிலை வகுப்புக்களில் ஆங்கில மொழி ஊடாக கல்வி கற்பதற்கு ஆங்கில மொழி விருத்தி ஆரம்ப வகுப்புகளில் முக்கியம் என்பதனை எல்லோரும் உணர்வோமாக.
ஆரம்பம் 19-12-2005
அனுமதியை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

IIS
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2006
விண்ணப்பிக்கத் தவறாதீர்கள்!
விண்ணப்ப முடிவு திகதி
15.12.2005
இவ் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

AMERICA GREEN CARD
அமெரிக்க விசா
AMERICA VISA விற்கு விண்ணப்பங்கள் நாளை 2 மணி வரையுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
விண்ணப்பக்கட்டணம் ரூபா 200 மட்டும்
விசேட சலுகை :விண்ணப்பிக்கும் அனைவர்க்கும் SAAMSTECH இன் 1000/- பெறுமதியான 60 அலகுகள் கொண்ட ஆங்கில பாடநெறி இலவசம்.
SAAMSTECH
841, Hospital Road, Jaffna. 021 - 4591571
233/4, Kasthuriar Rd, Jaffna 021 - 2229505

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.